# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 சித்திரை 15 வியாழக்கிழமை (27-04-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:130


# அரசுத் தரப்பின் மேதினப் பேரணி கைவிடப்பட்டது!

## ஆனையிறவு வீழ்ச்சியின் விளைவு

கொழும்பு,ஏப்ரல் 27

**பொதுமக்கள் ஐக்கிய முன்னணி எதிர்வரும் முதலாம் திகதி நடத்தவிருந்த மே தினப் பேரணி கைவிடப்பட்டுள்ளதாக இறுதி நேரத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.**

ஆனையிறவு முகாம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலின் போது படையினர் பலர் உயிரிழந்தமை மற்றும் பாதுகாப்பு நிலைமைகளைக் கருத்தில் கொண்டே பேரணி கைவிடப்பட்டதாக அரச சார்புச் செய்தி ஒன்று தெரிவித்தது.

பேரணி கைவிடப்பட்ட போதும் திட்மிட்டபடி கொழும்பு மாநகரசபை வளவில் மேதினக் கூட்டம் நடத்தப்படும் என்று மாகாணசபைகள் உள்ளூராட்சி அமைச்சர் அலவி மௌலானா தெரிவித்தார்.

ஆனையிறவு முகாம் மீதான தாக்குதலின்போது காயமடைந்து சிகிச்சை பெற்றுவரும் படையினருக்கும், அவர்களின் சேமநல னுக்காகவும் தொழிலாளர்கள் தமது ஒரு நாள் சம்பளத்தை வழங்க வேண்டுமெனவும் - அமைச்சர் அலவி மௌலானா கேட்டுள்ளார்.

(உ-7)

### நாகர்கோயிலில் யுத்தம் வெடித்தது?

யாழ்ப்பாணம்,ஏப்.27

வடமராட்சி கிழக்கில் படையினரின் கடைசி எல்லைப்புறமான நாகர்கோயில் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 3மணிமுதல தொடர்ந்து பெரும் குண்டுச் சத்தங்கள் கேட்டவண்ணம் இருந்தன. நள்ளிரவிலும் இச்சத்தங்கள் கேட்டதாக பருத்தித்துறைப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

நாகர் கோயிலில் பெரும் யுத்தம் மூண்டிருப்பதாக ஊர்ஜிதப்படுத்தப்படாத தகவல்களை மேற்கோள்காட்டி வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்று நேற்றிரவு அறிவித்தது. (உ)

## ஜனாதிபதி வெளிநாட்டில்! அரச எம்.பீக்கள் விசனம்!!

கொழும்பு,ஏப்.27

ஆனையிறவு வீழ்ச்சிக்குப் பின்னும் ஜனாதிபதி சந்திரிகா தொடர்ந்தும் வெளிநாட்டில் தங்கியுள்ளமை அரச எம்.பிக்கள் மத்தியில் பெரும் அதருப்தி நிலையைத் தோற்றுவித்துள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

பொது மக்கள் ஐக்கிய முன்னணியில் இடம் பெற்றுள்ள கட்சிகளின் உறுப்பினர்கள் மற்றும் படையினரின் பெற்றோர்கள் மத்தியிலும் இந்த விசன நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நாட்டின் பாதுகாப்புப் படையினரின் எதிர்காலம் என்பவற்றைக் கருத்தில் கொள்ளாது ஜனாதிபதி தனது சொந்த விடயத்தில் மாத்திரம் அக்கறையாக இருக்கின்றார் எனவும் எம்.பிக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை ஜனாதிபதி வெளிநாட்டில் இருந்து கொண்டு படை உயர் அதிகாரிகள் மத்தியில் மாற்றங்களை ஏற்படுத்துவது மற்றும் உத்தரவுகளைப் பிறப்பிப்பதுபோன்ற செயல்களில் ஈடுபடுவது படை உயர்அதிகாரிகள் மத்தியிலும் அதிருப்தி ஏற்படுத்தியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-7)

## ஆனையிறவில் சிறிய பின்னடைவே; அது ஒரு பெரும் தோல்வியே அல்ல!

### அனுருத்த கூறுகின்றார்

கொழும்பு,ஏப்.27

"ஆனையிறவு மோதலில் இராணுவத்துக்கு சிறிய பின்னடைவு ஏற்பட்டது உண்மை எனினும் அது ஒரு பெரும் தோல்வி அல்ல."- என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார்.

இலங்கை மன்றக்கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடபகுதியில் படையினருக்கு ஓரளவு பின்னடைவு ஏற்பட்ட போதும் அவர்கள் யுத்தத்தில் வெற்றி பெறுவது நிச்சயம். ஆனையிறவில் இராணுவம் சிறிய பின்னடைவைச் சந்தித்தது உண்மைதான். ஆனால் அது சில வட்டாரங்களில் மிகைப்படுத்திக் கூறப்படுவது போன்று பெரும் தோல்வியே அல்ல.

சந்தர்ப்பவாத நோக்குடன் சிலர் வதந்திகளைப் பரப்பி வருகின்றனர்.இருப்பினும் நாட்டை மீட்பதற்கான போரில் படையினர் துணிச்சலாக ஈடுபட்டுள்ளனர். படையினருக்கு உதவவேண்டியது மக்களின் கடமை.

- இவ்வாறு ரத்வத்த தனது உரையில் மேலும் கூறினார்.(உ-6)

## உடனடியாக மருந்து அனுப்பாவிடில் வன்னியில் நிலைமை மோசமாகும்

### மீண்டும் எச்சரிக்கிறது எம்.எஸ்.எவ்.

கொழும்பு,ஏப்.27

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கு உடனடியாக மருந்துப் பொருள்கள் அனுப்பி வைக்கப்படவில்லையென்றால் அங்கு நிலைமை மேலும் மோசமடையும் என்று எம்.எஸ்.எவ். மருத்துவக்குழு மீண்டும் எச்சரித்துள்ளது.

'அன்ரிபயட்டிக்' மருந்துகள், வலி நிவாரணிகள், மயக்க மருந்துகள் ஆகியவற்றின் கையிருப்பு அபாயக் கட்டத்தைக் கடந்து மிக மோசமான நிலையை அடைந்துள்ளது என்றும் - அந்த அமைப்பு அறிவித்துள்ளது.

பெண்களும், சிறுவர்களும் இதனால் பெரும் கஷ்டங்களை எதிர்கொள்வதாகவும் அது தெரிவித்துள்ளது.

அதேசமயம் -

காயமடைந்த புலிகளுக்கு சிகிச்சையளிக்கப் பயன்படும் மருந்து

(10ஆம் பக்கம் பார்க்க)

## 700 பொலித்தீன் பைகளில் படையினரின் சடலங்கள்

### 50 லொறிகளில் எடுத்துவரப்பட்டனவாம்

கொழும்பு,ஏப்.27

ஆனையிறவு மோதலில் உயிரிழந்த படையினரின் சடலங்களை எழுநூறு பொலித்தீன்பைகளில இட்டு ஐம்பது லொறிகளில் ஏற்றிப் புலிகள் கிளிநொச்சிக்கு எடுத்துவந்தனர் என்றும் -

அவற்றில் உருக்குலையாத நிலையில் இருந்த 236 சடலங்களை மட்டும் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு பெறுப்பேற்று வவுனியாவுக்கு எடுத்துச் சென்றது என்றும்-

அங்கு வைத்து 126 சடலங்களை மட்டும் அவை படையினருடையவை என்று தெரிவித்து அதிகாரிகள் பொறுப்பேற்றுக் கொண்டு ஏனையவற்றைத் திருப்பி அனுப்பிவிட்டனர் என்றும் -

செய்தி ஏஜென்ஸி ஒன்று அறிவித்தது.

அதே சமயம் -

ஆனையிறவில் உயிரிழந்த படையினரின் சடலங்களில் பல 5 நாள்கள் சென்றுவிட்டதனால் மிக உருக்குலைந்த நிலையை அடைந்துள்ளதை அடுத்து, அவற்றைப் பூரண இராணுவ மரியாதைகளுடன் தகனம் செய்வதற்கான நடவடிக்கைகளைப் புலிகள் மேற்கொண்டு வருவதாகவும் வன்னித் தகவல்கள் தெரிவித்தன.

(உ-6-9)

## படையினரின் 28 சடலங்களே அடையாளம் காணப்பட்டன

வவுனியா,ஏப்27

ஆனையிறவு மோதலின் போது புலிகளால் கைப்பற்றப்பட்டு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலம் நேற்றுமுன்தினம் ஒப்படைக்கப்பட்ட படையினரின் 126 சடலங்களில் 28 சடலங்கள் மட்டுமே அடையாளம் காணப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

சடலங்களை அடையாளம் காண்பதற்காக ஆனையிறவில் நிலைகொண்டிருந்த படைப்பிரிவுகளின் பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியாவுக்கு விசேட விமானம் மூலம் அழைத்து வரப்பட்டனர்.சுமார் 5மணித்தியாலங்களை செலவிட்ட அவர்கள் 28 சடலங்களை மட்டுமே அடையாளம் காட்டினர்.

அடையாளம் காணப்படாத 98 சடலங்கள் சமயக் கிரியைகளைத் தொடர்ந்து சகல இராணுவ மரியாதைகளுடனும் தகனம் செய்யப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது. (உ-க-6-9)

## ஆனையிறவுப் போரில் ஆயிரம் படையினர் காயம்

கொழும்பு,ஏப்.27

ஆனையிறவு இராணுவத் தளம் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதலினால் படுகாயமடைந்த ஆயிரத்து 74 படையினர் நாட்டின் பல வைத்தியசாலைகளிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனறு இராணுவப் பேச்சாளர் பாலித பெர்ணாண்டே நேற்றுத் தெரிவித்தார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் 174 பேரும்,அனுராதபுரம் வைத்தியசாலையில் 141பேரும், அனுராதபுரம் இராணுவ வைத்தியசாலையில் 114பேரும், ஸ்ரீஜெயவர்த்தனபுர வைத்தியசாலையில்146 பேரும்,பனாகொடை மற்றும் கண்டி வைத்தியசாலைகளில் 31பேரும்

(10ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவுப் பாலத்தின் ஊடாகப் போக்குவரத்து

கொழும்பு,ஏப்.27

புலிகளால் கடந்த சனியன்று கைப்பற்றப்பட்ட ஆனையிறவுப் பகுதியிலுள்ள ஆனையிறவுப் பாலம் மக்கள் போக்குவரத்துக்கு திறந்து விடப்பட்டதை அடுத்து பச்சிலைப் பள்ளியைச் சேர்ந்த பொது மக்கள் பலர் புதுக்குடியிருப்புக்குச் சென்று தங்கியுள்ளனர் என வன்னித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

புதுக்குடியிருப்புப் பகுதியிலுள்ள பொது அமைப்புக்கள் இந்த மக்களை தற்காலிகமாகத் தங்க வைப்பதிலும் அவர்களுக்கு வேண்டிய தேவைகளைப் பூர்த்தி செய்து கொடுப்பதிலும் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை விடுதலைப் புலிகள் வசமான ஆனையிறவுப் படைமுகாமை வன்னிப் பொதுமக்கள் சென்று பார்வையிட்டு வருகின்றனர் எனவும் - தெரிவிக்கப்பட்டது.

## ஆனையிறவு வெற்றி மாநாடு சிதம்பரத்தில் ஏழாம் திகதி!

சென்னை,ஏப்.27

ஆனையிறவுப் படைத்தளம் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டதை முன்னிட்டு எதிர்வரும் 7 ஆம் திகதி தமிழ் நாட்டின் சிதம்பரம் நகரில் வெற்றி மாநாடு ஒன்று நடத்தப்படவுள்ளது.

தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் தமிழீழ ஆதரவாளர்கள் பலரும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுவர் என ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் பழ.நெடுமாறன் தெரிவித்தார். இந்த மாநாடு குறித்து அவர் நேற்று அறிக்கை ஒன்றையும் விடுத்தார்.

ஆனையிறவு முகாம் புலிகள் வசமாகிவிட்டது. எனவே யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்குப் புலிகளுக்குநீண்டகாலம் தேவையில்லை.

அத்துடன் தமிழீழம் விரைவில் பிறந்துவிடும் என்ற எண்ண அலை அனைத்துத் தமிழர் மத்தியிலும் தோன்றியுள்ளது.

அதேவேளை தனிச்சிறந்த இராணுவத் தளபதியாகப் பிரபாகரன் உயர்ந்து சிறந்து விளங்குவார் - இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-7)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# குண்டுவெடிப்பில் டிரக் சேதம்

வவுனியா,ஏப்.27

வவுனியா, மரக்காரம்பளைப் பகுதியில் நேற்று முன்தினம் நண்பகல் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவம் ஒன்றில் படையினரின் டிரக் ஒன்று பலத்த சேதமடைந்தது.

வீதிச் சோதனைக்காக டிரக்கில் வந்த படையினர் வீதியோரமாக வாகனத்தை நிறுத்திவிட்டு சோதனையில் ஈடுபட்டிருந்த சமயமே அதன் அருகில் குண்டு வெடித்ததாகவும் -

எனினும் இதனால் படையினருக்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை எனவும் - படை வட்டாரங்கள் தெரிவித்தன. இதனையடுத்து சாஸ்திரிகூழாங்குளம் பகுதியில் நடந்த தேடுதலில் 7 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். (ஐ-7-8)

## அவசர கலந்துரையாடல்

மட்டக்களப்பு கல்வியியல் கல்லூரிக்கு அனுமதி பெற்று போக்குவரத்தை மேற்கொள்ள முடியாதவர்கள் அனைவரையும் இன்று (27-04-2000) இருபாலைச் சந்தியிலுள்ள Agency Post Office இல் காலை 10 மணிக்கு சமுகம் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

*மட்டக்களப்பு கல்வியியல் கல்லூரி மாணவர்கள்*

(75788)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்



| | | |
|---|---|---|
| அன்னை மடியில் | | ஆண்டவன் பதியில் |
| 1956 | | 2000 |
| 11 | | 03 |
| 14 | | 14 |

### திருமதி மகாலட்சுமி மகேஸ்வரன்

B. A. Dip.in. Ed.
(ஆசிரியை, யா/கட்டுவன்புலம் மகாவித்தியாலயம்)

*இல்லத்தின் ஒளிவிளக்காய் என்றும்*
*கல்வியில் ஒளிவீசி கவிதையில் புகழ்பாடி*
*நல்வழி காட்டிய எம் அன்னையே!*
*எல்லோரும் ஒன்றுகூடி வேண்டுகின்றோம்*
*இறைவனை*
*உன் ஆத்ம சாந்திக்காக.*

எங்கள் குடும்பத்தலைவியின் துயரில் பங்கு கொண்டு எமக்கு ஆறுதலளித்த அனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு இன்று (27-04-2000) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**கணவர், பிள்ளைகள், சகோதரர்கள்.**

சோடாக் கொம்பனி ஒழுங்கை,
மல்லாகம். (75767)


# CTC

நீர்வேலி
கணக்கீடு
By.S.COLLINS (BBA)
A/L 2001
ஆரம்பம்:
27.04.2000 3.30
பங்குடமை
A/L 2002
கலை, வர்த்தக வகுப்புக்கள் நடைபெறுகின்றன. (75800)

சிற்றிசன் கல்வி நிறுவனம்
கணக்கீடு
கொலின்ஸ்
A/L 2002
பங்குடமை
நடைபெறுகிறது
செவ்வாய்,வியாழன்-4.30
கல்வியங்காடு சந்தை முன்பாக. (75798)

எலைற் கல்வி நிலையம்
கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
A/L 2002
நாடகமும் அரங்கியலும்
ஆசிரியர்
யோண்சன்
புதியபிரிவு ஆரம்பம்
29-04-2000 (75766)

ராஜா
யாழ்ப்பாணம்
அஜித். ஷாலினி
நடிப்பில்
அமர்க்களம்
காட்சிகள்
10.30, 2.30 (C/11604)

நாகம்ஸ்
சுன்னாகம்
இன்று மட்டும்
ரஜனி, சௌந்தர்யா,
ரம்பா, செந்தில்
நடிப்பில்
அருணாச்சலம்
காட்சிகள் 11.00, 2.30
(புதிய நேரம்)
நாளை முதல்
கண்ணுக்குள் நிலவு (75759)


# இளைஞர் விடுதலை

யாழ்ப்பாணம்,ஏப்ரல்27

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு காங்கேசன்துறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பின் யாழ். சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட இளைஞர் ஒருவர் நேற்று யாழ். நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டார்.

யாழ்ப்பாணம் ஓட்டுமடத்தைச் சேர்ந்த கந்தசாமி விமலசேனாதிராசா (வயது18) என்பவரே விடுவிக்கப்பட்டவராவார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் படையினரால் கைது செய்யப்பட்டு கடந்த மூன்று மாத காலம் தடுத்துவைக்கப்பட்டிருந்த இவர் தொடர்பான குற்றச்சாட்டுகள் எதுவும் தெரிவிக்கப்படாத காரணத்தினால் யாழ். நீதிமன்ற நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா மேற்படி இளைஞரை விடுவித்தார். (இ-5)

## சேவை நயப்பு பாராட்டு விழா

### திரு. க.அருந்தவராசா

**(ஸ்ரீலங்கா புனித ஜோன் அம்புலன்ஸ் படை)**

தன்னலம் கருதாச் சேவையாளராக மிளிரும் திரு.க.அருந்தவராசா பண்டத்தரிப்பில் மீள் குடியமர்வின் பின்பும் தன்னுடைய சிரமத்தையும் கஷ்டங்களையும் பாராமல் எமக்கு உதவவேண்டும் என்ற ஒரே நோக்கோடு எம்மிடத்துக்கு வந்து அலுக்காமல், சலிக்காமல் சகல வழிகளிலும் எமக்கு ஒத்துழைப்பு நல்கி முதலுதவி, அணிநடை, யோகாப்பியாசம் முதலான பயிற்சி வகுப்புக்களை நடத்தியமை போற்றுதற்குரியது.

நாம் இன்று இவ்வளவு தூரம் சிறப்பும், பெருமையும் அடைவதற்கு ஆணிவேராக இருந்தவர் அருந்தவராசா ஆவார். எங்களில் 64 பேரை உருவாக்குவதற்குத் தம்மாலான சேவையை வழங்கியவர் அருந்தவராசா என்று கூறினால் மிகையாகாது.

அத்துடன் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் பலரின் வேண்டுகோளுக்கிணங்க கருத்தரங்குகளை வைத்து ஆக்கமும், ஊக்கமும் அளித்தமையை மறக்க முடியாது. அவரது சேவையைப் பாராட்டுகின்றோம்.

***மனையியல் பயிற்சியாளர்களும்,***
***சென்.ஜோன் அம்புலன்ஸ் படைப் பிரிவினரும்,***
***பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம்.***

(C/11975)

## சமூக சேவையாளனுக்கு முன்னுதாரணமானவர்

### திரு.க.அருந்தவராசா

**(ஸ்ரீலங்கா புனித ஜோன் அம்புலன்ஸ் படை)**

சென். ஜோன் படை அணியை எமது மண்ணில் செயற்படுத்தி பணியாற்றி வரும் எங்கள் அன்பிற்குரிய அருந்தவராசா அவர்கள் எத்தகைய பிரதிபலனும் எதிர்பாராது தன் உடலை வருத்தி வழங்கும் சேவை மூலம் தன் உள்ளத்தில் திருப்தி கொள்பவர். சமூகசேவை என்பது அதன் வரன்முறை பிறழ்ந்து, கண்ணியம் தளர்ந்து, ஓர் ஆடம்பரமான புகழ் சேர்க்கும் ஒன்றாகக் கருதும் இக்காலத்தில், காலத்துக்கு ஏற்ற வகையில் "காலம் பொன்னானது" என்பதையே மந்திரமாகக் கொண்டு பணியாற்றும் இவருக்கு நன்றி கூறுவதற்கு சேவை நயப்பு விழா போதுமானதல்ல. அவர் காட்டும் "சேவை முறைமைகளை" பின்பற்றுதலே பொருத்தமானது. இவரும் இவரது குடும்பமும் இணைந்து இம்மண்ணுக்கு ஆற்றும் பணிகள் கூட்டுறவுத்துறைக்குக் கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டமை அதிர்ஷ்டவசமானது. மாவட்டத்தில் எல்லாப் பகுதிகளுக்கும் சென்று கூட்டுறவு மகளிருக்குச் சிறப்புப் பயிற்சி வழங்கி, கூட்டுறவாளர்களின் பெருமதிப்பைப் பெற்றவர்கள். இவரதும் குடும்பத்தினரதும் பணிகள் எம்மக்களுக்குத் தொடர்ந்து கிடைக்கவேண்டி வாழ்த்துகின்றோம்.

| | |
|---|---|
| சு.சிவசுப்பிரமணியம் (மாவட்டச் செயலாளர்) | திரு.பெ.கனகசபாபதி (தலைவர்) |

**யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவுச் சபை.**

(சி/11976)

# கண்ணீர் அஞ்சலி

**எங்கள் கல்லூரியின் பிரதி அதிபர்**
**திருமதி சரஸ்வதி பிறைசூடி அவர்களின்**
**வாழ்க்கைத் துணைவர்**

## மா.பிறைசூடி

அவர்களின் திடீர்மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு எமது கண்ணீர் அஞ்சலியையும் செலுத்துகின்றோம்.

***பாடசாலை அபிவிருத்திச் சபை,***
***யாழ்.வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை***

(C/11974)

# மரண அறிவித்தல்

## திருமதி தர்மராசா சண்முகமலர்

**(புனிதம்)**

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் தற்போது ஸ்கந்தபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தர்மராசா சண்முகமலர் 21.04.2000 வெள்ளிக்கிழமை ஸ்கந்தபுரத்தில் காலமானார்.

இவர் தர்மராசா (பொது முகாமையாளர், அளவெட்டி மல்லாகம்-ப.நோ.கூ.சங்கம், ஸ்கந்தபுரம்) அவர்களின் அன்பு மனைவியும் பாலகுமார்(ஆசிரியர், கிளிநொச்சி), செல்வக்குமார் (ஆசிரியர், தாவடி அ.மி.த.க. பாடசாலை), யசோதா, விசியகுமார், ரமேஸ்குமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - இரத்தினம் தம்பதிகளின் அன்பு மகளும் வேலுப்பிள்ளை - நல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் தவமலர், சிவபாதசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.04.2000 சனிக்கிழமை ஸ்கந்தபுரத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த.செல்வக்குமார் (மகன்)

*இணுவில் மேற்கு,*
*இணுவில்.* (75801)


NIPPON NIPPON NIPPON NIPPON NIPPON NIPPON NIPPON NIPPON

*குளிர்மையின் மறுபெயர்!*

# NIPPON

இலங்கையில்
அதிகூடிய தெரிவு 30கும்
மேற்பட்ட மாதிரிகள்

மின்விசிறிகள்

- TABLE FANS
- CEILING FANS
- STAND FANS
- BOX FANS
- EXHAUST FANS
- WALL FANS
- ORBIT FANS
- AIR COOLING FANS, ETC.ETC.

LANKA NIPPON
'தரத்தின் சின்னம்'

No.18,Keyzer Street, Colombo - 11
T.P:- 437735, Fax:- 437736
No.10, Trelawny Place (Behind Milk Bar)
Bambalapitiya Junc. Colombo - 04 Tel: 589992.

# தமிழக சட்ட சபையில் காரசாரமான விவாதம்

## நளினியின் தண்டனைக் குறைப்புக் குறித்து

சென்னை, ஏப்ரல் 27

ராஜீவ் கொலை வழக்குக் குற்றவாளிகள் நால்வரில் ஒருவரான நளினிக்கு தூக்குத் தண்டனையை ஆயுள்தண்டனையாகக் குறைத்தது குறித்து தமிழக சட்டசபையில் அ.தி.மு.க மற்றும் தமிழ் மாநில காங்கிரஸ் உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளை அடுத்து காரசாரமானவிவாதம்நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

இந்த விவாதத்தில் பதிலளித்துப் பேசிய முதல்வர் கருணாநிதி ''நளினிக்கு ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட தமிழக அரசு செய்த பரிந்துரை மனிதாபிமான அடிப்படையில் ஆனது'' என்றார்.

மேலும் அவர் பதிலளிக்கையில்—

''ராஜீவ்கொலை வழக்கில் தீர்ப்பு வழங்கிய மூன்று நீதிபதிகளில் ஒருவர் நளினியின் குழந்தை அனாதையாகி விடக்கூடாது என்பதற்காக அவருக்குக் கருணை காட்டலாம் எனக் கூறியுள்ளார்'' என்றார்.

அதேசமயம் நளினிக்கு ஆயுள் தண்டனை விதிக்கக் கூறிய பரிந்துரையினால் விடுதலைப் புலிகளுடன் தமிழக அரசுக்குத் தொடர்பிருக்கலாம் என்று அர்த்தம் ஆகாது விடுதலைப்புலிகளின் வன்முறைச் செயலுக்கு தி.மு.க. ஆதரவளிக்காது என்றும் கருணாநிதி கூறினார்.

இதேசமயம் சட்டசபையில் அ.தி.மு.க. தமிழ் மாநில காங்கிரஸ் உறுப்பினர்கள் நளினியின் தண்டனைக் குறைப்புக் குறித்து எதிர்ப்புத் தெரிவித்ததே விவாதத்துக்குக் காரணம் என உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவித்தன.

## யூதாஸாக நடித்தவர் தூக்கில் தொங்கி மரணம்

### ஈஸ்ரர் ஞாயிறன்று சம்பவம்

ரோம், ஏப்ரல் 27

இத்தாலியில் கிராமம் ஒன்றில் ஈஸ்ரர் ஞாயிறு தினத்தையொட்டி நடைபெற்ற இயேசுபிரானின் நாடகத்தில் யூதாஸாக நடித்தவர் தூக்குக்கயிறு இறுக்கி பரிதாபமாக இறந்தார்.

ரெனாட்டோ டி.பாலோ என்ற இருபத்துமூன்று வயது இளைஞரே இறந்தவராவார்.

இவர் தனது கிராமத்தில் நடைபெற்ற இயேசு குறித்த நாடகத்தில் யூதாஸாக நடித்துக் கொண்டிருந்தார்.

பைபிளின்படி இயேசுவைக் காட்டிக் கொடுத்தபின் யூதாஸ் மனமுடைந்து தூக்குமாட்டி இறக்கும் காட்சியின் போது டி பாலோ கயிற்றைக் கழுத்தில் மாட்டிக் கொண்டு தூங்குவது போல் நடித்தார்.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக கயிறு குரல்வளையை நெரித்ததால் துடிதுடித்து இறந்தார்.

ஆனால் பார்வையாளர்கள் இவரின் தவிப்பை அறியாமல், நடிப்பு மிக நன்றாக இருப்பதாக எண்ணி பாராட்டுத் தெரிவித்தனர்.

பத்து நிமிடங்கள் கழித்தே ரெனட்டோ டிபாலோ இறந்தது தெரியவந்தது

இதன்பின் அந்தக் கிராமம் முழுவதும் சோகமயமாகிவிட்டது. (இ-ரி)

## சீனாவில் 'தலங்குங்' போராட்டம்

பெய்ஜிங், ஏப்ரல் 27

சீனாவின்கம்யூனிச அரசால் தடைசெய்யப்பட்ட ''தலங்குங்'' மதப் பிரிவைச் சேர்ந்தவர்கள் பெய்ஜிங்கில் உள்ள தியனமென் சதுக்கத்தில் நூற்றுக்கணக்கில் திரண்டு தமது மதப்பிரிவு மீதான அரசின் அடக்குமுறைகளை எதிர்த்து அமைதிப் போராட்டம்

உலக அரங்கில்

நடத்திய போது பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

சீன அரசுக்கு பெரும் சவாலாக இருக்கும் தலங்குங் மதத்தினரின் மதவழிகாட்டிகள் பலரை அரசு கைது செய்து சிறையில் அடைத்துள்ளது.

ஆனாலும் சீனாவில் பலமாகப் பரவிவிட்ட தலங்குங் மதத்தையோ, அதனைப்பின் பற்றும் பெருமளவிலான சீன மக்களையோ அரசால் கட்டுப்படுத்த முடியவில்லை என்று கூறப்படுகிறது. (இ-ரி)

## திரிணாமுல் காங்கிரஸுக்கு காங்கிரஸ் ஆதரவு வழங்கும்

மேற்கு வங்காளத்தில் மாநில கம்யூனிஸ்ட் அரசைத் தோற்கடிப்பதற்காக பாரதீய ஜனதாவின் முக்கிய தோழமைக் கட்சியான திரிணாமுல் காங்கிரஸுடன் கூட்டணி ஏற்படுத்த காங்கிரஸ் கட்சிமுடிவு செய்துள்ளது.

காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தியுடன் ஆலோசனை நடத்தியபின் மாநில காங்கிரஸ் தலைவர் கனிகான் சௌத்ரி இதனைத் தெரிவித்தார்

மேலும் சமீபத்தில் வரப்போகும் உள்ளூராட்சித் தேர்தல்களை விட அடுத்த ஆண்டு நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தல்களே தமது கூட்டணியின் முக்கிய இலக்கு என்றும் அவர் கூறினார்.

## செவ்வாய்க்கு விண்கலம்

வாஷிங்ரன்ஏப்ரல் 27

அமெரிக்க விண்வெளி நிறுவனம் (நாஸா) அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் செவ்வாய்க்கிரகத்திற்கு ''சேர்வயர்'' என்ற விண்கலத்தை அனுப்பத் திட்டமிட்டுள்ளது.

இந்தப் பயணத்திட்டத்தில் பெருமளவில் மாணவர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள். இதன் மூலம் விண்வெளி ஆய்வு பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தலாம் என நம்பப்படுகிறது. (இ-ரி)

## டான்சி நிலப்பேர வழக்கு

# ஜெயலலிதாவுக்கு எதிராக உச்ச நீதிமன்றம் தீர்ப்பு

புதுடில்லி, ஏப்ரல் 27

அ.தி.மு.க பொதுச் செயலாளர் ஜெயலலிதா மீது டான்சி நிலப்பேர ஊழல் வழக்கில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று இந்திய உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மேலும் மேற்படி வழக்கில்



இருந்து ஜெயலலிதாவை விடுவித்து சென்னை உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பை ரத்துச் செய்வதாகவும் உச்ச நீதிமன்றம் தீர்ப்புக் கூறியுள்ளது.

இந்த வழக்கில் மூன்றரைக் கோடி ரூபா பெறுமதியான 'டான்சி' அரசு நிறுவனத்தின் நிலத்தை மிகக் குறைந்த விலைக்குத்தாம்பங்குதாரராக உள்ள 'ஜெயா பப்ளிகேஷன் நிறுவனத்துக்கு ஜெயலலிதா வாங்கிக் கொண்டார் என்று அவர்மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

முன்பு இந்த வழக்கில் இருந்து ஜெயலலிதாவை சென்னை உயர் நீதிமன்றம் விடுவித்திருந்தது. இதனை எதிர்த்து தமிழக அரசு தாக்கல் செய்து மறுபரிசீலனை மனுமீதே உச்ச நீதிமன்றம் மேற்கண்ட தீர்ப்பை வழங்கியது. (இ-ரி)

## நிபந்தனை அற்ற படைவிலகல் கோருகிறார் சிரிய அமைச்சர்

பெய்ரூட், ஏப்ரல் 27

தெற்கு லெபனானில் இருந்து தனது படைகளை வாபஸ்பெற இஸ்ரேல் எந்தவித நிபந்தனையும் விதிக்கக் கூடாது என்று சிரிய வெளிவிவகார அமைச்சர் பரூக் அல்சாரா கூறியுள்ளார்.

லெபனான் அதிபரைச் சந்தித்த பின் செய்தியாளர்களிடம் அல்சாரா இதனைக் கூறினார்.

மேலும் இஸ்ரேல் படைவிலகலை நேர்மையாகவும் முற்றிலுமாகவும் மேற்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் தற்போதுள்ள நிலைமையை இஸ்ரேல் மேலும் சிக்கலாக்கவே விரும்புகிறது என்று கருதவேண்டி நேரிடும் என்றும் அமைச்சர்தெரிவித்தார்.

சமாதான உடன்படிக்கை எதுவும் கைச்சாத்திடாவிட்டாலும்கூட இஸ்ரேல் பலஸ்தீனப் பகுதிகளில் இருந்து தனது படைகளை விலக்க முடிவெடுத்துள்ளது தெரிந்ததே. (இ-ரி)

## இந்தியவிமானக்கடத்தல் பாக். ஏஜென்ட் கைது!

கல்கத்தா, ஏப்ரல் 27

நேபாளத் தலைநகர் காத்மண்டுவில் இருந்து கடந்த ஆண்டு டிசெம்பரில் 'இந்தியன் எயார் லைன்ஸ்' விமானம் கடத்தப்பட்ட சம்பவத்தில் விமானக் கடத்தலுக்கு சதித்திட்டம் தீட்டிய முக்கிய நபரான பாகிஸ்தான் உளவு அமைப்பைச் (ஐ.எஸ்.ஐ) சேர்ந்த பிலால் என்பவரை மேற்கு வங்கப் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

மேற்கு வங்கத்தின் வடபகுதிக் கிராமம் ஒன்றில் பதுங்கியிருந்த பிலாலைப் பற்றி சி.ஐ.ஏ. கொடுத்த தகவலின் பேரில் பொலீஸார் அவரைக் கைது செய்ததாகக் கூறப்படுகிறது.

மேற்படி விமானக்கடத்தலின் போது கடத்தல்காரர்களின் நிபந்தனைப்படி மூன்று முக்கிய காஷ்மீர் தீவிரவாதத் தலைவர்களை இந்தியா விடுவித்திருந்தது.

அவர்கள் ஆப்கானிஸ்தான் வழியாக பாகிஸ்தான் சென்றடைந்ததாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

அதன்பின் இந்தக் கடத்தலில் தொடர்புள்ளவர்கள் எனக் கருதப்பட்ட சிலரை இந்திய அரசு கைது செய்திருந்தது. (இ-ரி)

## இந்தியாவில் மழைக்கு 9 பேர் பலி!

புதுடில்லி, ஏப்ரல் 27

இந்தியாவில் உத்தரப் பிரதேசப் செகந்திரபாத் மாவட்டத்தில் இடி மற்றும் காற்றுடன் கூடிய பெரும் மழைக்கு 9 பேர் பலியாகினர்.

இந்தப் புயல் மழையினால் வீடுகள் இடிந்து வீழ்ந்தன. அதனால் பொதுமக்கள் பெரிதும் பாதிப்படைந்தனர்.

மரங்கள் மற்றும் மின்சாரக் கம்பங்கள் சாய்ந்து விழுந்ததால் மாவட்டத்தில் போக்குவரத்து மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் மீட்புப் பணிகள் மற்றும் நிவாரணப் பணிகள் மேற் கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்குவதாக மீட்புக் குழு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உத்தரப் பிரதேசத்தில் மழையினால் சேதம் ஏற்பட்டுள்ள இதே சமயம் பக்கத்து மாநிலங்கள் வரட்சியால் பெருமளவில் பாதிப்படைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-ரி)

## செய்தித் துளிகள்

### வேலை இல்லாத் திண்டாட்டம்

உலக பொருளாதார நிறுவனத்தில்உறுப்புநாடாகச் சேர்ந்த பின் சீனாவில் தொழில்துறையில் பெரும் மாற்றங்கள் ஏற்படும் என சீனாவுக்குச் சென்றுள்ள சிங்கப்பூர் வர்த்தக அமைச்சர் கூறியுள்ளார்.

இதேசமயம், உலகச் சந்தையில் ஏற்படும் போட்டியைச் சமாளிக்க சீன நிறுவனங்கள் ஆட்குறைப்பு செய்ய நேரிட்டால் சீனாவில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிக்கலாம் என பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். (இ-ரி)

### வாஜ்பாய் உரை

எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டை மீறுவது மற்றும் ஊடுருவல் மூலம் காஷ்மீரில பயங்கரவாதத்தைத் தூண்டுவது போன்ற இந்திய விரோதச் செயல்களை பாகிஸ்தான் நிறுத்தினால் தான் பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்க முடியும் என இந்தியப் பிரதமர் வாஜ்பாய் நாடாளுமன்றத்தில் கூறினார்.

மேலும் அவர், அதிபர் கிளின்ரனின் இந்திய விஜயம், காஷ்மீர் பிரச்சினை குறித்த அமெரிக்காவின் முடிவுகளை மாற்ற உதவும் எனவும் நம்பிக்கை தெரிவித்தார். (இ-ரி)

### விமான சேவையில் ஆதிக்கம்

சிங்கப்பூர்சிற்றி, ஏப்ரல் 27

சிங்கப்பூர் விமான சேவை நிறுவனம் மற்றைய நாடுகளின் விமான சேவைகள் நிறுவனங்களில் தனது ஆதிக்கத்தை அதிகரித்து வருகிறது. இதில் ஒரு நடவடிக்கையாக நியூசிலாந்து விமான சேவைகள் நிறுவனத்தில் 16.7 சதவீத பங்குகளை வாங்க உள்ளது இதனுடன் சேர்த்து நியூசிலாந்து விமானசேவை நிறுவனத்தில் மொத்தம் 25 சதவீதப் பங்குகள் சிங்கப்பூர் விமான சேவைகள் நிறுவனத்துக்குச் சொந்தமாகியுள்ளது (இ-ரி)

### சீனாவில் பதவி நீக்கம்

பெய்ஜிங் ஏபரல் 27

சீன நாடாளுமன்றத்தின் துணைத் தலைவரான செங்கெஜ்ஜி ஊழல் குற்றச்சாட்டின் பேரில் பதவி விலக்கப்பட்டார்.

67 வயதான கெஜ்ஜி முன்பு தெற்கு குவாங்சி மாகாணத் தலைவராக இருந்த போது பெருந்தொகைப்பணத்தை லஞ்சமாகப் பெற்றார் என்று அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

சீன அரசின் உயர் மட்டத்தில் ஊழல் பெருகிவிட்டதாக கருதப்பட்டதைத் தொடர்ந்து இப்போது அரசு கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவது குறிப்பிடத்தக்கது. (இ-ரி)

### இந்தியாவில் புதியமாநிலம்

பிஹார் சட்டமன்றம், மாநில சீரமைப்புப் பிரேரணையை அங்கீகரித்ததைத் தொடர்ந்து தனி 'ஜார்கண்ட்' மாநிலம் உருவாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பிஹார் மாநிலத்தின் தெற்கில்உள்ள 18 மாவட்டங்களை இணைத்து புதிய மாநிலம் உருவாகும். (இ-ரி)

# கிருமிநாசினிகள் பாவிக்கும் முறையை நீக்க விவசாயிகளுக்கு ஆலோசனை

வலி. கிழக்கு, ஏப்ரல் 27

கோவா, கத்தரி, தக்காளி போன்ற மரக்கறி வகைகளுக்கு இரசாயன மருந்துகளைப் பாவிக்கும் விவசாயிகள் மருந்துகளைத் தெளித்து மிகக் குறுகிய காலத்தில் அறுவடை செய்வதால் பாவனையாளர்களுக்குத் தீங்கு ஏற்படுகிறது. ஆகவே மருந்து தெளித்துக் குறிப்பிட்ட கால எல்லைக்குப் பின்னரே பயிர்களை அறுவடைசெய்யவேண்டும்.

மேற்கண்டவாறு யாழ். மாவட்ட விவசாய உதவிப் பணிப்பாளர் க. சின்னத்துரை கோரி உள்ளார்.

கோவா, தக்காளி, கத்தரி போன்ற மரக்கறி வகைகளுக்கு இரசாயன மருந்துகளைப் பாவித்துவிட்டுக் குறிப்பிட்ட கால எல்லைக்குப் பின் அறுவடை செய்யாது முன்னராகவே அறுவடை செய்வதால் நுகர்வோருக்குப் பாரிய பக்க விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய நோய்கள் உண்டாகின்றன.

இரசாயன மருந்தைப் பாவிப்பதைக் குறைத்துத் தாவரச் செயற்கைப் பீடநாசனியான வேப்ப விதைச் சாறு, வேப்ப இலைச்சாறு, உள்ளிக்கரைசல், மாட்டுச் சாணி போன்றவற்றைப் பாவிப்பதன் மூலம் பயிர்ச் செய்கைச் செலவுகள் குறைகின்றன. அத்துடன் நுகர்வோருக்கு நச்சுத்தன்மையின் தாக்கம் ஏற்படாமற் தடுக்க முடிகின்றது. இதனைக் கருத்திற்கொண்டு விவசாயிகள் செயற்படவேண்டும் இப்படி அவர் மேலும் கேட்டுள்ளார்.

(இ-180)

# மேதினக் கூட்டங்களை நடத்த பல்வேறு அமைப்புகளும் ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 27

தொழிலாளர் தினமான எதிர்வரும் திங்கட்கிழமை பல்வேறு தொழிற்சங்கங்களும் மே தினக் கூட்டங்களை நடத்த ஏற்பாடு செய்துள்ளன.

வட பிராந்திய தொழிற் சங்கங்களின் கூட்டமைப்பின் கூட்டம் யாழ். கைலாசபதி கலையரங்கில் காலை 9.30 மணிக்கு இ. தவராசா தலைமையில் நடைபெறும்.

இந்தக் கூட்டத்தில் வட பிராந்திய உப்பள ஊழியர் சேவை நலச்சங்கத்தின் உறுப்பினர்களைக் கலந்து கொள்ளுமாறு சங்கத் தலைவர் கே. பொன்னுத்துரை கேட்டுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்டக் கிளையினரும் பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் ஆதரவுத் தொழிற் சங்கங்களும் இணைந்து நடத்தும் மே தினக்கூட்டம் யாழ். முதலாம் குறுக்கு வீதியில் அமைந்துள்ள கட்சியின் காரியாலயத்தில் வேல்முருகு தங்கராசா தலைமையில் நடைபெறும்.

இதேவேளை—

ஊர்காவற்றுறை, வேலணை பகுதிகளில் இம்முறை மே தினத்தைக் கொண்டாட ஊர்காவற்றுறை ஈ. பி. டி. பி அமைப்பினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

வேலணை துறையூரில் இருந்து ஆரம்பமாகும் மேதின ஊர்வலம் ஊர்காவற்றுறை திறந்த வெளியரங்கைச் சென்றடையும். கூட்டுறவுச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள் பங்குகொள்ளும் இந்த ஊர்வலத்தில் ஊர்திகளின் பவனியும் இடம்பெறவுள்ளது.

ஊர்வலத்தின் முடிவில் ஊர்காவற்றுறை திறந்த வெளியரங்கில் மேதினப் பொதுக் கூட்டம் நடைபெறும்.

(க-51-30-111)

# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி வழங்கப்பட்டோர்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 27

யாழ். குடாநாட்டில் இருந்து வெளி மாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம் மாதம் 26 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:

**சங்கானை**

(138240ஏ), (141427ஏ), (141814ஏ).

**நெடுந்தீவு**

(12898ஏ), (12898பி), (12898சி), (12898டி), (13103ஏ), (13108ஏ), (13115ஏ).

**ஊர்காவற்றுறை**

(12652ஏ), (12652பி), (12652சி), (12652டி), (13024ஏ), (13024பி), (13054ஏ), (13054பி), (13055ஏ), (13055பி), (13055சி), (13059ஏ), (13659பி), (13077 ஏ), (13077 பி), (13093 ஏ), (13097 ஏ), (13097 பி), (13106 ஏ), (13111 ஏ), (13115 ஏ), (13134 ஏ), (13173 ஏ), (13135 பி), (13148 ஏ), (13148 பி), (13149 ஏ), (13150 ஏ), (13154 ஏ), (13155 ஏ), (13155 பி), (13160 ஏ), (13160 பி), (13165 ஏ), (13165 பி), (13165 சி), (13167 ஏ), (13167 பி), (13167 சி), (13185 ஏ),

**கோப்பாய்**

(134147 ஏ), (136497 ஏ), (136497 பி), (136522 ஏ), (136590 ஏ), (136590 பி), (136590 சி), (13662 ஏ), (136675 ஏ), (136675 பி), (136675 சி), (136677 ஏ), (136686 ஏ), (136686 பி), (136687 ஏ), (136687 பி), (136689 ஏ), (136691ஏ), (136694ஏ), (136698ஏ), (136698பி), (143259ஏ), (143259பி), (143259சி), (143266ஏ), (143266பி), (143268ஏ), (142368பி), (143271ஏ), (143403ஏ), (143420ஏ), (143420பி),

**நல்லூர்**

(136860ஏ), (136876ஏ), (138465ஏ), (138465பி), (138465சி), (138465டி), (138465ஈ), (141892ஏ), (141892பி), (141892சி), (141931ஏ), (141931பி), (141931சி), (141931டி), (141970ஏ), (141970பி).

**சண்டிலிப்பாய்**

(138101),

**தெல்லிப்பழை**

[141375ஏ], [141375பி], [141826ஏ], [141826பி], [141833ஏ], [142020ஏ],

**உடுவில்**

(121249ஏ), (121249பி), (136357ஏ), (136357பி), (143242ஏ), (143243பி), (143255ஏ), (143255பி), (143255சி), (143255டி), (138237ஏ), (139580ஏ), (139822ஏ), (139822பி), (141630ஏ), (141726ஏ), (141716பி), (141789ஏ), (141806ஏ), (141822ஏ), (141822பி), (141822சி), (141822டி), (141832ஏ), (141920ஏ), (141920பி), (141920சி), (141953ஏ), (141953பி), (142018ஏ), (142018பி), (142018சி).

**வேலணை**

(12159ஏ), (13109ஏ), (13110ஏ), (13117ஏ), (13128ஏ), (13128பி), (13141ஏ), (13142ஏ), (13142பி), (14145ஏ), (14147ஏ), (13152ஏ), (13153ஏ), (13153பி), (13153சி), (12157ஏ), (13168ஏ), (13168பி), (13168சி), (13169ஏ), (13169பி).

(க)

# பதிவாளர்களையும் கலந்துகொள்ள அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஏப்ரல் 27

பிரதேச செயலகங்களினால் நடத்தப்பட்டு வரும், நடமாடும் சேவைகளில் அவ்வப்பகுதிகளிலுள்ள விவாகப் பிறப்பு இறப்பு பதிவாளர்களையும் கலந்து கொள்ளுமாறு மேலதிக மாவட்ட பதிவாளர் என். சதாசிவ ஐயர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நடமாடும் சேவைகளில் கலந்து கொண்டு விவாக, பிறப்பு, இறப்பு பதிதல் தொடர்பில்பொதுமக்களுக்கு வேண்டிய தகவல்களை வழங்கி உதவுமாறும் அவர் மேலும் கேட்டுள்ளார்.

(இ - க - 5)

# கருத்தரங்கு

திருமறைக் கலாமன்றத்தின் சிறுவர் கலைக் கூடத்தினால் எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு மன்ற மைதானத்தில் பெற்றோர்களுக்கான கருத்தரங்கு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

'குடும்பமும் சிறுவரின் ஆரம்ப அபிவிருத்தியும்' என்ற கருப்பொருளில் அமைந்த இந்தக் கருத்தரங்கில் அனைத்துப் பெற்றோர்களையும் கலந்து கொண்டு பயனடையுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-10)

# திருநாவுக்கரசு சுவாமிகளின் குருபூசை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 27

திருநாவுக்கரசு நாயனாரின் குருபூசை தினம் நாளை மறுதினம் சனிக்கிழமை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் கொண்டாடப்படும்.

சைவ பரிபாலன சபையின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த நிகழ்வில் புராண படனம், பண் இசை, சொற்பொழிவுகள் என்பன இடம்பெறவுள்ளன.

(க-30)

★ ★ ★

திருநாவுக்கரசு நாயனாரின் குருபூசையை முன்னிட்டு அகில இலங்கைத் திருமுறை மன்றத்தின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 7 மணிமுதல் திருநெல்வேலி கிழக்கு ஸ்ரீ வெள்ளைப் பிள்ளையார் ஆலயத்தில் குரு பூசையும், அற்புதத் திருப்பதிகங்கள் முற்றோதல் நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

அன்றையதினம் பிற்பகல் 4.30 மணிக்கு நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் சுவாமி ஆலயத்தில் திருநாவுக்கரசு சுவாமிகளுக்கு அபிஷேக ஆராதனை திருமுறைப் பாராயணம் என்பனவும் நடைபெறவுள்ளன.

(க)

# பனை தும்புத் தொழிற்சாலை

நெடுந்தீவு, ஏப்ரல் 27

வேலணையில் பனம் தும்புத் தொழிற்சாலை விரைவில் செயற்படவுள்ளது.

மேற்படி தொழிற்சாலைக்கான கட்டட வேலைகள் முடிவடைந்ததைத் தொடர்ந்து பனம் பொருள் அபிவிருத்திச் சபை தும்புத் தொழிற்சாலைக்கு வேண்டிய இயந்திர சாதனங்களைத் தருவித்துள்ளது.

தொழிலாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதும் தொழிற்சாலை இயங்கத் தொடங்கும் எனவும் —

பனம்பொருள் அபிவிருத்திச் சபை இந்தத் தொழிலகத்தை வேலணை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திடம் கையளிக்கும் எனவும் கூறப்படுகிறது.

(க-111)

# பூசகர் உட்பட 3 தமிழர் கைது

கொழும்பு, ஏப்ரல் 27

இரத்மலானைப் பகுதியில் வசிக்கும் பூசகர் ஒருவரும் மேலும் 3 தமிழ் இளைஞர்களும் இங்களன்று கல்கிசைப் பொலீஸாரால்கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறுகைது செய்யப்பட்டவர்களில் இருவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப்புலிகளின் புலனாய்வுப்பிரிவைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவித்தே பொலீஸார் இவர்களைக் கைது செய்தனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

(இ-7)

# பொதுசன உதவிப் பணம்

நவாலி, ஏப்ரல் 27

சண்டிலிப்பாய்ப் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களினதும் காசநோய், தொழுநோய், புற்றுநோய் என்பனவற்றின் உதவிப்பணம் பெறுபவர்களினதும் மார்ச் மாதத்துக்கான கொடுப்பனவுகள் அந்த அந்தத் தபாலகங்களுக்கு சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்டவர்கள் தத்தமது தபாலகங்களில்கொடுப்பனவினைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(க-100)

# பயிற்சிக் கருத்தரங்கு

வலி. தெற்கு, ஏப்ரல் 27

புதிய பாடத்திட்டத்துக்கமைவான ஆங்கிலப்பாடப் பயிற்சிக் கருத்தரங்கு இன்று முதல் 29 ஆம் திகதி வரை மருதனார்மடம்இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

(க-152)

# தானியப் பயிர்ச்செய்கையில் ஆர்வம் காட்டவேண்டும்

## விவசாய உதவிப்பணிப்பாளர் கோரிக்கை

வலி. கிழக்கு, ஏப்ரல் 27

யாழ் மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் தானியப்பயிர்ச் செய்கைக்கும் முக்கியத்துவம் கொடுத்து அந்தப் பயிர்ச் செய்கையில் ஈடுபட வேண்டும் என யாழ். மாவட்ட விவசாய உதவிப்பணிப்பாளர் கேட்டுள்ளார்.

விவசாயிகள் மரக்கறி வகை மற்றும் வாழை போன்றவற்றில் கூடிய நாட்டம் கொண்டுள்ளனர்.

அதேபோல் தானியப்பயிர்களான கௌப்பி, பயறு, எள்ளு, நிலக்கடலை, குரக்கன் போன்றவற்றை செய்வதன் மூலம் இங்கு சந்தை வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளமுடியும். கொழும்பில் இருந்து இங்கு இத் தானிய வகைகளை இறக்குமதி செய்யும் தேவையும் குறையும்.

இங்குள்ள விவசாயிகள் மரக்கறி வகைகளையும், வாழைக்குலைகளையும் சந்தைப்படுத்த முடியாமல் நஷ்டத்துக்குள்ளாகியுள்ளனர். தானிய வகைகளைப் பொறுத்தமட்டில் சந்தைப் படுத்த முடியாவிடினும் அதனை இருப்புச் செய்து பாதுகாத்து சந்தைப்படுத்த முடியும். எதிர்பார்க்கும் இலாபத்தினையும் பெற்றுக் கொள்ளலாம்.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-180)

# பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் உதவி

யாழ்ப்பாணம், ஏப்ரல் 27

கடந்த 96 ஆம் ஆண்டு காலப்பகுதியில் குடாநாட்டில் கைதுசெய்யப்பட்டுக் காணாமற் போனவர்களின் பத்து வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளுக்கு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் வங்கி நிரந்தர வைப்புப் பத்திரம் வழங்கப் படவுள்ளது.

எனவே பிள்ளைகளின் தாய்மாரை மாணவர் ஒன்றியம் அழைக்கும் பொழுது சமுகமளிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே பெயர்களைப் பதிவு செய்த 33 பேருக்கே பத்திரம் வழங்கப்படவுள்ளதாக கைதானோர் காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கம் தெரிவித்துள்ளது.

(இ-10)


# மரண அறிவித்தல்

## திருமதி நாகலிங்கம் சிவபாக்கியம்

சித்தன்கேணியைச் சேர்ந்த திருமதி நாகலிங்கம் சிவபாக்கியம் (24 - 4 - 2000) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் மயில்வாகனம் நாகலிங்கத்தின் (முன்னாள் தலைமை குமாஸ்தா, மஸ்கேலியா எஸ்டேட்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற வட்டுக்கோட்டை நவரத்தினம் ஆச்சிமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், இராசகுமார் (மக்கள் வங்கி, கொழும்பு) சிவகுமார் (முன்னாள் உத்தியோகத்தர், அரசாங்க அச்சகம் கொழும்பு, தற்போது கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும்இராசகுமாரி, சிவயோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும் இராஜீவன், அனுஷா, சிவரூபன், சிந்தியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (25 - 4 - 2000) செவ்வாய்க்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
10. நாகலிங்கம்
(கணவர்)

சித்தன்கேணி.

(75178)

# கொழும்பில் களியாட்ட நிகழ்ச்சிகளை உடன் நிறுத்துமாறு கோரிக்கை

## அதற்கான பணத்தைப் படைகளுக்கு வழங்க வற்புறுத்து

கொழும்பு, ஏப்ரல் 27

கொழும்பு மாவட்டத்தில் அடுத்த சில தினங்களில் நடைபெற இருக்கும் களியாட்ட நிகழ்ச்சிகள், இசை நிகழ்ச்சிகள் யாவும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என கொழும்பு மாவட்ட அபிவிருத்திக்குழு நேற்று முன்தினம் தீர்மானித்தது.

கொழும்பு கச்சேரியில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் குழுத் தலைவரும் போக்குவரத்து நெடுஞ் சாலைகள் துறை பிரதி அமைச்சருமான பேர்னாட் குரே இந்த யோசனையை முன் வைத்தார்.

இந்த நிகழ்வுகளுக்காக செலவிடப்படும் நிதி படையினரின் நலன் கருதி இராணுவத் தலைமையகத்தில் ஒப்படைக்கப்பட வேண்டும் என இந்த யோசனையை முன் வைத்துப் பேசிய குரே கூறினார்.

இந்த யோசனை ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இதேவேளை —

கொழும்பு மாவட்டத்தில் மட்டுமன்றி நாடளாவிய ரீதியில் நாட்டின் இவ்வாறான சூழ்நிலையில் இத்தகைய நிகழ்ச்சிகள் நிறுத்தப்பட வேண்டும் என கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டிக்ஸன் ஜி. பெரேரா தெரிவித்தார்.

(இ-3-8)

# ஆனையிறவுபின்னடைவுகுறித்து விசாரிக்க குழு நியமிக்க முடிவு

கொழும்பு, ஏப்ரல் 27

ஆனையிறவுத்தளம் வீழ்ச்சியடைந்ததன் மூலம் ஏற்பட்டுள்ள பின்னடைவு குறித்து ஆராய விசாரணைக்குழு ஒன்றை இலங்கை அரசு நியமிக்கவுள்ளது.

கடந்த மாதம்26ஆம் திகதி முதல் விடுதலைப் புலிகள் மேற்கொண்டு வந்த தாக்குதலின் பயனாக ஆனையிறவுத்தளம் வீழ்ந்தமைக்கான காரணிகள், படையினரின் பின் வாங்கல்ஆகியன தொடர்பாக இந்தக்குழு ஆராயவிருக்கிறது

இந்த வீழ்ச்சி குறித்து இராணுவ நீதிமன்றத்திலும் விசாரணை இடம்பெறவுள்ளது

மன்னிப்பின் பின்னடைவு குறித்து விசாரணை செய்த குழு சமர்ப்பித்த அறிக்கையின் அடிப்படையில் பல இராணுவ அதிகாரிகள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருந்தனர் என்றும் —

ஆனையிறவு தொடர்பான விசாரணைக்குழுவின் அறிக்கையின்படி எந்த அதிகாரி வீடு செல்லப்போகிறாரோ தெரியவில்லை என்றும் — இராணுவ விமர்சகர் ஒருவர் கருத்து வெளியிட்டார்.

(இ-க-3-7)

# ஆனையிறவுச் சுவரொட்டி: இளைஞர் மீது தாக்குதல்!

மட்டக்களப்பு, ஏப்ரல் 27

ஆனையிறவுத் தள் வெற்றி தொடர்பாக சுவரொட்டிகள் ஒட்டியதன் எதிரொலியாக மட்டக்களப்பு கிரான்குளம் பகுதியில் தமிழ் இளைஞர்கள் நையப்புடைக்கப்பட்டனர் என்று தெரியவந்தது.

ஆனையிறவுத் தளம் விடுதலைப் புலிகள் வசமானதையொட்டி பல்வேறு வாசகங்கள் அடங்கிய சுவரொட்டிகள் கிரான் குளம் பகுதியில் ஒட்டப்பட்டிருந்தன.

இதைத் தொடர்ந்து அந்தப் பகுதியைச் சுற்றி வளைத்த அதிரடிப் படையினர் தமிழ் இளைஞர்களை நையப்புடைத்ததாக மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராஜா தெரிவித்தார்.

இதன் காரணமாக பத்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள் ஆரையம்பதி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

(இ-3-7)

# ஆனையிறவை இழந்ததற்காக சமாதானப்பேச்சை நிறுத்தக் கூடாது

## பிரதி அமைச்சர் டிலான் கோருகிறார்

கொழும்பு, ஏப்ரல் 27

ஆனையிறவுத்தளம் இழக்கப்பட்டமைக்கும் சமாதான முயற்சிகளுக்கும் எந்தவித தொடர்பும் இல்லை. சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டும். மேற்கண்டவாறு நீதி அரசமைப்பு விவகாரத்துறைப் பிரதி அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலைமை தொடர்பாக அவர் கருத்து வெளியிடுகையில் மேலும் கூறியதாவது:-

ஆனையிறவுத்தளம் வாபஸ் பெறப்பட்டமைக்காக, அரசு முன் எடுத்துச் செல்லும் அரசியல் தீர்வு முயற்சிகளை கைவிட வேண்டும் என்பதல்ல.

அந்த முயற்சிகளைக் கைவிட்டால் அமைதிக்கும் சமாதானத்துக்கும் எதிரான குழுவின் வலையில் சிக்கிவிடுவோம்.

சமாதான முயற்சிகளைக் கைவிட்டு முழு நாடும் யுத்தத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்று கோரப்படுகின்றது. இதற்காக சமாதான முயற்சிகளைக் கைவிட்டுவிடக் கூடாது.

பிரச்சினைக்குத் தீர்வுகாண விரும்புபவர்கள் அரசுடன் நடத்தவுள்ள பேச்சுக்களின் போதுபேரம் பேசும் கரததை வலுப்படுத்தத் தமது ஆயுத பலத்தைநிரூபிப்பது வழக்கம். அத்தகைய காரியம் ஒன்றைத் தான் விடுதலைப்புலிகளும் செய்துள்ளனர்

எனவே ஜனாதிபதியும் எதிர்க்கட்சியினரும் மேற்கொண்டுள்ள சமாதானப் பேச்சுக்கள் தொடர வேண்டும் —என்றார். (இ-3)

# புலிகளின் புதிய தாக்குதல்களை முறியடிக்கப் படையினர் தயார்!

## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்ரல் 27

யாழ். குடாநாட்டில் விடுதலைப்புலிகளின் புதிய தாக்குதல்களை முறியடிக்க படையினர் தயாராகி வருகின்றனர். அதற்காகப் படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர் என்று இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

ஆனையிறவுப் படைத்தளத்தில் இருந்து பின்வாங்கிய படையினர் புதிய நிலைகளை அமைத்து அவற்றைப் பலப்படுத்தி வருகின்றனர். எந்த வித தாக்குதல்களையும் முறியடிக்கத் தயாராகி வரும் படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் படையினரின் நிலைகளைப் பலப்படுத்துவதற்காக மேலதிக படையணிகள் அங்கு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன —

இப்படி அவர் மேலும் சொன்னார்.

(ஐ-க-3-7)

# கேணலின் சடலம் கொழும்புக்கு

கொழும்பு, ஏப்ரல் 27

ஆனையிறவில் நிலைகொண்டிருந்த 54 ஆவது படைப்பிரிவின் ஒரு பிரிவுக்குப் பொறுப்பாகவிருந்த கட்டளையிடும் அதிகாரி லெப்ரினன்ட் கேணல் கபிம்கோபராச்சியின் சடலம் நேற்று முன்தினம் கொழும்புக்குக் கொண்டுவரப்பட்டது

ஸ்ரீலங்காவின் மூத்த படை அதிகாரியான இவர் இம் மாதம் 25 ஆம் திகதி முதல் மாதுறு ஓயாவில் உள்ள படைப்பயிற்சிக் கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட இருந்தார். இடமாற்ற உத்தரவு கிடைத்து மாதுறு ஓயாவுக்கு இவர் செல்வதற்கு முன்னர் ஆனையிறவில் புலிகளின் தாக்குதலில் பலியாக நேர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

# சகல இனத்தவர்களினதும் விவரங்கள் கொழும்பில் சேகரிப்பு

## பாதுகாப்பை உறுதி செய்யவாம்

கொழும்பு, ஏப்ரல் 27

ஆனையிறவுத் தளத் தாக்குதலை அடுத்துத் தலைநகர் கொழும்பின் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்குடன் அங்கு வசிக்கும் சகல இன மக்களின் விவரங்களும் திரட்டப்பட்டு வருகிறன.

கொழும்பிலுள்ள சகல பொலீஸ் நிலையங்களும் தத்தமது பிரிவுகளின் கீழ் அடங்கும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் அனைவரதும் பெயர் விவரங்கள் மற்றும் தொழில் செய்யும் இடங்கள் என்பவற்றை நேரடியாகச் சென்று திரட்டி வருகின்றனர்.

தலைநகரின் பாதுகாப்பை உறுதிசெய்யும் வகையில் இத்தகைய நடவடிக்கையில் பொலீஸார் ஈடுபட்டு வருவதாகக் கொழும்புப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் போதியனகே தெரிவித்துள்ளார்.

இதற்கென நியமிக்கப்பட்ட பொலீஸ் குழுவினர் வீடு வீடாகச் சென்று விவரங்களைத் திரட்டி வரும் அதேவேளை அவர்கள் தொழில் புரியும் அலுவலகங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் ஆகியவற்றுக்கும் சென்று விவரங்களைத் திரட்ட உள்ளனர்.

எனவே இதற்குச் சகல இன மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அவர் கேட்டுள்ளார்.

மேலும்—வடக்கு—கிழக்கில் இருந்து கொழும்புக்கு வருவோர் தமது விவரங்களைத் தாம் தங்கியிருக்கும் வீட்டின் உரிமையாளர் ஊடாக உடனடியாகத் தத்தமது பொலீஸ் நிலையங்களில் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

வடக்கு—கிழக்குத் தவிர்ந்த ஏனைய பகுதிகளிலிருந்து கொழும்புக்கு வருவோர் தம்மை உடனடியாகப் பதிவு செய்யும் அவசியம் இல்லை.

இப்படி வியனகே மேலும் தெரிவித்தார்.

(இ-3-8)

# தகவல் தெரிவிக்க விசேட பிரிவு

கொழும்பு, ஏப்ரல் 27

ஆனையிறவுத் தளம் மீதான தாக்குதலில் காயமடைந்த மற்றும் உயிரிழந்த படையினரின் விவரங்களைத் தெரிவிப்பதற்காக கொழும்பில் உள்ள இராணுவத் தலைமையகத்தில் விசேட பிரிவு ஒன்று இயங்க ஆரம்பித்துள்ளது

இந்தப் பிரிவு சகல விவரங்களையும் திரட்டியுள்ளதாகவும்—

படையினரின் உறவினர்கள் தமக்குத் தேவையான விபரங்களைப் பெறமுடியும் என்றும்— இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதே சமயம்— படையினர் தொடர்பான விவரங்களைச் சேகரிப்பதற்கும்

அந்த விவரங்களை அவர்களது உறவினர்களுக்குத் தெரிவிப்பதற்கும்— வெண்தாமரை இயக்கம், அலுவலகம் ஒன்றைத் திறந்துள்ளது. இந்த அலுவலகம் 24 மணி நேரமும் இயங்குகின்றது. ((இ-க-3-8)

# யுத்தத்தில் பின்னடைவுகள் ஏற்படுவது சகஜம் தான்!

## அனுருத்த இப்படிக் கூறுகிறார்

கொழும்பு, ஏப்ரல் 27

''யுத்தத்தில் பின்னடைவுகளும்; குறைபாடுகளும் ஏற்படுவது சகஜம், அதற்காக எந்த வகையிலும் படையினர் ஊக்கமிழப்பதை அனுமதிக்கக் கூடாது'' இப்படி பதில் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்தரத்வத்த தெரிவித்தார்.

கொழும்பு செய்தி ஏஜென்ஸிக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இப்படிக் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

யுத்தத்தில் தந்திரோபாயமாகச் சிலநடவடிக்கைகளைப் படையினர் எடுப்பது வழக்கம். ஓர் இடத்தில் இருந்து பின்வாங்கி வேறு இடங்களில் நிலைகொண்டு தாக்குதல்களை நடத்துவது வழமையான விடயம் ஆகும்.

ஆனால் இதற்காகப் படையினர் உற்சாகம் இழப்பதையோ, மனவலிமை குன்றுவதையோ அனுமதிக்க முடியாது.

எனவே இராணுவ நடவடிக்கை தொடர்பான விமர்சனங்களை அரசியல்வாதிகள் வெளியிடக்கூடாது. அவ்வாறு செய்வது எதிரியை ஊக்குவிப்பதாகவே அமையும்.

யுத்தத்தில் ஒரு போதும் படையினர் தோல்வியடைவதில்லை. அவர்கள் இறுதி இலக்கை நோக்கி முன்னேறுவர். அந்த இலக்கை அடைவதைத் தடுக்க விவாதங்களைத் தவிர்க்க வேண்டும் — இப்படி அவர் கூறினார். (இ-3)

# மே தினக் கூட்டங்களை ரத்துச் செய்யுங்கள்

## அமைச்சர் பிரேமரத்ன கோரிக்கை

கொழும்பு, ஏப்ரல் 27

ஆனையிறவு முகாம் வீழ்ச்சியின் எதிரொலியாக ஏற்பட்டுள்ள நிலைமையைக் கருத்தில்கொண்டு மேதினக்கொண்டாட்டங்களை நடத்தவேண்டாம் என்று நாடாளுமன்ற அலுவல்கள், திட்டமிடல் அமுலாக்கல் பிரதி அமைச்சர் சாந்த பிரேமரத்ன தொழிற் சங்கங்களைக் கேட்டுள்ளார்.

மாவட்ட அபிவிருத்திக் கூட்டத்தில் பங்குபற்றிய பல அமைச்சர்களும் இந்தக்கருத்தைத் தெரிவித்தனர் என்று அவர் கூறினார்.

கொழும்பிலும் ஏனைய பிரதேசங்களிலும் இடம்பெறும் படையினரின் இறுதிக் கிரியைகளில் அந்தப்பகுதிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பிரதேச சபை உறுப்பினர்களும் பங்கு கொள்ளவேண்டும் என்று அவர் கேட்டுள்ளார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் மேதினக் கூட்டங்களுக்கான ஏற்பாடுகள் யாவும் செய்யப்பட்டுள்ளன. எனினும் அந்தக் கூட்டங்களை ரத்துச்செய்வது தொடர்பாக ஆராய்கிறோம் என்று மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சர் அலவி மௌலானா தெரிவித்தார்.

(இ-3-8)

# இடம்பெயர்ந்த 3,838 பேர் தென்மராட்சியில

தென்மராட்சி, ஏப்ரல் 27

பளைப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்துள்ள மக்களில் ஆயிரத்து 21 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 838 பேர் தென்மராட்சிப் பிரதேசத்தில் தங்கியுள்ளனர். (இ-117)

# அரியாலையில் படையினர் வசமுள்ள வீடுகளுக்கு வாடகை தரக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 27

அரியாலைப் பிரதேசத்தில் பாதுகாப்புப் படையினரின் பாவனையிலுள்ள வீடுகள் மற்றும் கட்டடங்களுக்கான வாடகைப் பணத்தை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்று அரியாலை அபிவிருத்திச் சங்கம் யாழ். பிரதேச செயலரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அரியாலையில் இடம்பெற்ற நல்லூர்ப் பிரதேச செயலகத்தின் நடமாடும் சேவையின் போது சமர்ப்பிக்கப்பட்ட மகஜரில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:—

அரியாலைப் பிரதேசத்தில் பூங்கன்குளம், கருக்காயம்பதி, மாம்பழச்சந்தி, தபால் கட்டைச் சந்தி, நெடுங்குளம் சந்தி, முள்ளி, கனகரட்ணம் வீதி, மலர்மகள் வீதிச் சந்தி போன்ற இடங்களில் நிலைகொண்டுள்ள பாதுகாப்புப் படையினர் பொதுமக்கள் பலரின் வீடுகளை, மற்றும் வர்த்தக நிலையக் கட்டடங்களை பாவனைக்கு வைத்துள்ளனர்.

இந்த வீடுகள் மற்றும் கட்டடங்களின் உரிமையாளர்கள் பிறருடைய வீடுகளில் இடம் பெயர்ந்து வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இவர்களில் எவருக்கும் வீடுகள், கட்டடங்களுக்கான வாடகை இதுவரை வழங்கப்படவில்லை.

அதே சமயம் ஆயிரத்து 500 ரூபாவுக்கு உட்பட்ட மாத வருமானம் பெறுபவர்களுக்கு பாதுகாப்பு நடவடிக்கைகளின் போது சேதமுற்ற வீடுகளைப் புனரமைப்புச் செய்வதற்கு 25 ஆயிரம் ரூபா உதவித்தொகையாக வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் இப்பிரதேச மக்களில் இதுவரை எவருக்கும் இந்த உதவு தொகை வழங்கப்படவில்லை.

வீட்டு உரிமையாளர்களினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய சகல ஆவணங்களும் உரிய முறையில் ஒப்படைக்கப்பட்ட பின்பும் இந்த உதவித் தொகை மறுக்கப்படுவது வேதனையைத் தருகின்றது.

அரியாலை சனசமூக நிலையம் 1996 ஆம் ஆண்டு தொடக்கம் இராணுவத்தினரின் தங்குமிடமாகப் பாவிக்கப்பட்டு வருகின்றது. இந் நிலையத்தினை உரிய இடத்தில் இயங்க வைப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் இதுவரை பலனளிக்கவில்லை.

இந்த சனசமூக நிலையத்தினை நிர்வாகத்தினரிடம் கையளிக்க ஆவன செய்யப்படவேண்டும்.

இப்படி அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-3-5)

## 24 மணி நேர மின்சாரம்

கரவெட்டி கிழக்கு, கரவெட்டி மத்தி, துன்னாலை மேற்கு, துன்னாலை மத்தி, துன்னாலை தெற்கு, துன்னாலை கிழக்கு ஆகிய கிராமங்களுக்கு திங்கட்கிழமை முதல் 24 மணி நேர மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

(இ-173)

## கட்டட வேலை பூர்த்தி

நெல்லியடி, ஏப்ரல் 27

அகதிகளுக்கான ஐ. நா. தூதரக அனுசரணையில் சுமார் 4லட்சம் ரூபா செலவில் புலோலி தெற்கு சிங்கை நகரில் அமைக்கப்பட்டு வரும் பனம் பொருள் பல்தொழில் தொகுப்பு நிலையக் கட்டட வேலைகள் பூர்த்தியாகியுள்ளன.

இந்தக் கட்டடம் பருத்தித்துறை பிரதேச செயலரினால் இம்மாத இறுதியில் பனை அபிவிருத்திச் சபையிடம் கையளிக்கப்படவிருப்பதாகத் தெரிய வருகின்றது.

(இ-109)

## கோழிகளுக்கு அம்மை நோய் தடுப்பூசி

திருநெல்வேலி, ஏப்ரல் 27

யாழ். நாவலர் வீதியிலுள்ள யாழ். கால்நடை வைத்திய சாலையில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் காலை 9 30 மணி முதல் 10 30மணி வரை கோழிகளுக்கு அம்மை நோய்த்தடுப்பு ஊசி மருந்து ஏற்றப்பட்டு வருகின்றது.

குஞ்சுபொரித்து 28 ஆவது நாளன்றும், 5 ஆம் மாதத்திலும் இந்த அம்மை நோய் தடுப்பு ஊசி மருந்து ஏற்றப்பட வேண்டும் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-135)

## பொதுக் கிணற்றில் தண்ணீர் இல்லை

நெல்லியடி, ஏப்ரல் 27

புலோலி தெற்கு சிங்கை நகரில் உள்ள பொதுக்கிணற்றில் நீர் வற்றியுள்ளது. இதனால் இப்பகுதியில் தங்கியுள்ள, வடமராட்சி கிழக்கு மக்கள் குடிதண்ணீர் இன்றிப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கிணற்றைப் புனரமைப்புச் செய்து, குடிதண்ணீர்ப் பிரச்சினையை நிவர்த்தி செய்து தருமாறு, சிங்கைநகர் உதய சூரியன் சனசமூக நிலையத் தலைவர் வி. ஜீ. தங்கவேல், பருத்தித்துறை பிரதேச சபை செயலாளருக்கு அவசர மகஜர் ஒன்றை நேற்று முன்தினம் கையளித்தார். (இ-109)

# சுகாதார சேவைப் பதவிகளுக்கு பயிலுநர்கள் சேர்க்கப்படுவர்

## விண்ணப்ப இறுதி நாள் மே 5

யாழ்ப்பாணம், ஏப்ரல் 27

சுகாதார சேவைகளில் உள்ள பல பதவிகளுக்கு ஆள்களை நியமிப்பதற்காகப் பயிலுநர்களைச் சேர்த்துக் கொள்வதற்குரிய விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய இறுதிநாள் மே மாதம் 5 ஆம் திகதி என்று சுகாதார சேவைகள் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பங்களை அனுப்பவுள்ளோர் நூறு ரூபா பணத்தைச் செலுத்திப் பற்றுச் சீட்டுக்களைப்பெற வேண்டிய கடைசி நாள் மே 5 ஆம் திகதி ஆகும். இந்தத் தினத்திற்குப் பின்பு எக் காரணம் கொண்டும் பற்றுச் சீட்டுக்கள் வழங்கப்பட மாட்டா என்று திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஆகவே மே 5 ஆம் திகதியும் அதற்கு முன்பும் பணத்தைச் செலுத்திப் பற்றுச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ளுமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

(இ-10)

# திருகோணமலைக்கான தொலைபேசிகளும் செயலிழப்பு

திருகோணமலை, ஏப்ரல் 27

திருகோணமலைக்கும் வெளியிடங்களுக்கும் இடையிலான தொலைத்தொடர்புச் சேவை திங்கட்கிழமை முதல் செயல் இழந்துள்ளது.

புல்மோட்டைப் பகுதியில் உள்ள தொலைத்தொடர்புக் கோபுரத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்பே சேவை செயலிழந்தமைக்குக் காரணமாக இருக்கக் கூடும் எனத் தெரிவிக்கப்பட்டது.

புல்மோட்டைக்குச் சென்று திருத்தவேலைகளை மேற்கொள்வதில் சில பிரச்சினைகள் உள்ளன என்றும் —

அது தொடர்பாக டெலிகொம் நிறுவன அதிகாரிகள் சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சு நடத்தி வருவதாகவும் — கூறப்பட்டது.

தொலைத்தொடர்புக் கோபுரத்தில் ஏற்பட்ட பாதிப்புக்கான காரணம் தெரியவரவில்லை. (ஐ-3-9)

## கப்பலில் தபால்கள்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 27

நேற்று முன்தினம் காங்கேசன்துறைக்கு வந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் குடாநாட்டுக்கான வெளியூர்த் தபால்கள் அடங்கிய 223 தபாற் பொதிகள் எடுத்து வரப்பட்டுள்ளன.

இதே கப்பலில் குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட 34 தபாற்பொதிகள் அனுப்பி வைக்கப்பட்டதாகத் தபாற் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(இ-10)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபன
சிமெந்து அடைப்புப் பகுதி ஊழியர்

### அமரர் ச. சிதம்பரநாதன் (1390)

அவர்களின் குடும்பத்தவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

சிமெந்து பொதுத் தொழிலாளர் யூனியன்,
கா. சி. கூட்டுத்தாபனம்.
(75750)

## 157 ஆவது நினைவு நாளும் 5 ஆவது பிறந்த நாளும்



### செல்வன் நிவேதன் தேவராஜா

நிலவுதிட வந்தது 27 – 04 – 1995
நினைத்திடச் சென்றது 22 – 10 – 1999

நீங்காத நினைவதனில் நித்தியமாய்
ஆகிவிட்ட நம் நிவேதா!
தூங்கா மனக் கண்களுக்குள் நீ வந்து
வற்சாங்க ளைந்தாச்சு
ஏங்காத நாளின்றி நினைக்காணா
நம் மனம் நோக — அச்
சங்கரன் தான் நமையாக்கித்தன்
பாதம் உனையழைத்தான்

எம் பக்கம் உனையணையா
தம் பக்கம் உனை யழைத்தான்
உம்பர்க்கு உனையணைத்து
நம் பக்கம் உனை நினைக்கவைத்தான்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

என்றும் நினைத்திடும்
அன்பு அப்பா, அம்மா,
உடன்பிறப்புக்கள்.

வாசையடி வீதி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. (75725)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை உபஅதிபர்
சரஸ்வதி பிறைசூடி
அவர்களின் அன்புக் கணவரான

### அமரர் மாணிக்கராஜா பிறைசூடி

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், சக ஆளணியினர்.
யா/வேம்படி மகளிர் உயர்தரபாடசாலை.
(75784)

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 1932-05-19
உதிர்வு: 1993-04-14

### பிரம்மஸ்ரீ சு. திருமலை சாமிசர்மா

(கணேசையா)

திதி: 27-04-2000

அபரபக்க நவமி

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய்,
அன்பின் திருவுருவாய், பண்பின் பிறப்பிடமாய்,
பாசத்தின் உறைவிடமாய், நேர்மையின் நிறைகுடமாய்த்
திகழ்ந்து அனைவருக்கும் நல்வழிகாட்டிய
எமது அன்புத் தந்தையே!

நீங்கள் எம்மை விட்டகன்று ஏழு ஆண்டுகள் சென்றிடினும் உங்கள் நினைவலைகள் எம்மை விட்டகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
திருமதி மங்களம்மா
திரு. தி. சிவானந்தசர்மா
கோவையூர் கணேஷ் ரகுநாதக் குருக்கள்
ஞ. பாஸ்கரநாத சர்மா
யோ. விஜயகுமாரசர்மா
(குடும்பத்தினர்)

பருத்தித்துறை வீதி,
கோப்பாய். (75729)

# உதயன்

## வேண்டும் வியாபார நீதி

சற்றுப் பதற்றமான சூழ்நிலை உருவானதும் பாவனைப் பொருள்கள் கிடைக்காமற் போவது யாழ்ப்பாணக் குடா நாட்டில் சகஜமாகிவிட்டது.

சூழ்நிலை வேறு விதமாக உள்ளதே, முக்கிய பாவனைப் பொருள்கள் கிடைக்காமற் போய் விடுமே; கொஞ்சம் கூடக் குறைய வாங்கி வைப்போம் என்று எண்ணுவது பாவனையாளர்களின் வழமை.

இனிமேல் கப்பற் போக்குவரத்து எல்லாம் தடங்கற்படக் கூடும்; ஆகையால் பொருள்களைத் தாராளமாக விற்காமல், பெரும் பகுதியைப் பதுக்கிவிட்டால் வரும் நாள்களில் கூடுதல் விலைகளுக்கு விற்று அதிக லாபம் சம்பாதிக்கலாம் என்று "கணக்குப் பண்ணுவது" கடைக்காரர்களின் — வர்த்தகர்களின் — வழமை.

பாவனையாளர்களின் அவசரமும் சுயநலமும் வர்த்தகர்களைச் செயற்கைத் தட்டுப்பாட்டை உருவாக்குவதற்கு ஓரளவு தூண்டுகின்றன. அதனால் கஷ்டப்படுபவர்கள் பாவனையாளர்களே.

அவ்வாறு சொல்வதால் வர்த்தகர்கள் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தம்பாட்டில் பொருள்களைப் பதுக்குவதில்லை என்றோ கொள்ளை லாபம் அடிப்பதில்லை என்றோ அர்த்தமல்ல. அந்த விடயத்தில் அவர்கள் பலே கெட்டிக்காரர்கள்!

உணவு மற்றும் பாவனைப் பொருள்கள் பல வாரங்களுக்குப் போதியளவு கையிப்பில் உண்டு என்று அரச அதிகாரிகள் — பொறுப்பு வாய்ந்த உயர் அதிகாரிகள் — தெரிவித்தாற்கூட, வர்த்தகர்கள் அதனைக் காதில் போட்டுக் கொள்வதில்லை. ஒருவரை மற்றவர்பார்த்தும், சில சந்தர்ப்பங்களில் பேசி ஏற்பாடு செய்தும் பொருள்களைப் பதுக்கி, கொள்ளை லாபம் அடிப்பர்.

இந்த நிலையை நீக்குவதற்கு, நீதியான ஒழுங்குகளைச் செய்வதற்கு வர்த்தகர்கள் தமக்குள் ஏற்பாடு எதனையும் செய்வதற்கு இதுவரை முயன்றதில்லை; முன் வந்ததில்லை.

தமது தொழிலுக்கும் லாபத்துக்கும் தாம் இட்ட மூலதனம் மட்டுமன்றி, பாவனையாளர்களின் நலனும் அவசியம் என்பதனை எண்ணும் பரந்த வாணிபச் சிந்தனை குடாநாட்டில் மிகவும் அதமம். கீரைக்கடைக்கும் எதிர்க்கடை என்ற பாணியில், ஒருவரைப் பார்த்து மற்றவர் அதிக லாபம் பெறுவதே குடாநாட்டின் வர்த்தகஒழுங்காக நிலைக்கிறது!

போர்ச் சூழ்நிலை மற்றும் பதற்றமான வேளைகளிலேனும் பாவனையாளர் நலன் கருதி வியாபாரம் செய்வதற்கான விசேட வியாபார நெறிமுறைகளை எமது வர்த்தகர்கள் வகுப்பார்களா? குடாநாட்டின் பாவனையாளர்கள் தமது இரத்தத்தின் இரத்தங்கள் என்பதனைச் சிந்தித்துப் பார்க்கலாகாதா? அவர்கள் பல வகைகளாலும் நொந்து போயுள்ளனர் என்பதனைச் சற்று மனிதாபிமானத்துடன் கணக்கில் எடுக்கலாகாதா?

இந்த வாரத்தில் பெற்றோல் மண்எண்ணெய் ஆகியவற்றுக்கே தட்டுப்பாடும், கொள்ளை லாபமும் தலை காட்டியுள்ளன. ஏனைய பொருள்களுக்கும் அதேநிலை வராமல் வர்த்தகர்கள் பார்த்துக் கொள்வரா? பாவனையாளர்நலன் பேணப்பட வேண்டும் என்ற வியாபார நீதி இனிமேலாவது குடாநாட்டு மக்களைக் காப்பாற்றுவதற்கு வர்த்தகர்கள் மனங் கொள்ளட்டும்.

---

### இயங்காத நிலையில் உள்ள

# சிக்கனக் கடனுதவிச் சங்கங்களை இயங்க வைப்பதற்கு முயற்சி

யாழ். மாவட்ட சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜம் யாழ். மாவட்டத்தில் இயங்காத நிலையிலிருக்கும் சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கங்களை இயங்க வைக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

போர்க்கால அனர்த்தங்களின் போது ஏற்பட்ட இடம்பெயர்வுகளால் பல சங்கங்கள் தொடர்ந்தும் செயற்பட முடியாத நிலை ஏற்பட்டது.

யாழ். மாவட்டத்தில் முன்னர் 515 சிக்கனக் கடனுதவிச் சங்கங்கள் இருந்ததாகவும், இடம்பெயர்வுகளை அடுத்து தற்போது 180 சங்கங்கள் மட்டுமே இயங்கி வருவதாகவும் சமாஜத்தின் தலைவர் எஸ். முருகநேசன் தெரிவித்தார்.

விரைவில் ஏனைய இடங்களிலுள்ள சங்கங்களைப் புனரமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதே வேளை தவணை தப்பிய கடன்களை எதிர்வரும் ஜூன் 30 ஆம் திகதிக்கு முன்னர் திருப்பிச் செலுத்துபவர்களுக்கு மொத்த வட்டியிலிருந்து 20 சத வீத கழிவுச் சலுகை வழங்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

மாணவர்களின் உயர் கல்விக்கான கடன் கொடுப்பனவுத் திட்டம், விதவைகளுக்கான கடன் கொடுப்பனவுத் திட்டம், இளைஞர்களுக்கான கடன் கொடுப்பனவுத் திட்டம், உற்பத்தி முயற்சி கடன் கொடுப்பனவுத் திட்டம், சுயதொழில் ஊக்குவிப்புக் கடன் கொடுப்பனவுத் திட்டம், விவசாயக் கடன் கொடுப்பனவுத் திட்டம் ஆகிய பல்வேறு கடனுதவித் திட்டங்கள் சமாஜத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (இ-135)

## இளைஞன் கைது

சாவகச்சேரிப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் இராணுவத்தால் கைது செய்யப்பட்டுள்ளதாக அவரின் உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கல்வயல், சாவகச்சேரியைச் சேர்ந்த எட்வேட் ராஜா வசந்தரூபன் (வயது 18) என்ற இளைஞரே கடந்த 23 ஆம் திகதி மட்டுவிலில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார். (இ-10)

## கண்காட்சி

வலிகாமம் தெற்கு, ஏப்ரல் 27

புத்தாண்டில் உலகில் ஏற்பட உள்ள சமூக பொருளாதார மாற்றங்கள் பற்றி மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஏனையோருக்குத் தெரிவிக்கும் வகையில் கண்காட்சி ஒன்றினை ஜூன் 22 ஆம், 23 ஆம், 24 ஆம் திகதிகளில் மாகாண மட்டத்தில் நடத்த வடக்கு — கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இந்தக் கண்காட்சியில் 24 கல்விவலயங்களும் பங்குபற்ற இடமளிக்கப்படும்.

இந்தக் கண்காட்சியில் பங்கு கொள்ளவிரும்பும் வலிகாமம் வலய பாடசாலைகள் தங்களின் காட்சிப்பொருள்களின் விவரங்களை எதிர் வரும் 6 ஆம் திகதிக்கு முன்பு அனுப்பி வைக்குமாறும் வலய மட்ட கண்காட்சி எதிர் வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு இராமநாதன்கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் என்றும் கல்வி நிர்வாக உதவிக் கல்விப்பணிப்பாளர் கா. சந்திரபாலன் தெரிவித்துள்ளார். (க-152)

---

# அம்மன் தந்த சாமிச் சோறுண்டு திருவருள் பெற்ற பெரியசந்நியாசியார்

## ஈழத்துச் சித்தர்களில் இவரும் ஒருவர்

இணுவில்பதிதந்த சித்தர் பெருமான் பெரிய சந்நியாசியாரின் குருபூசைத் தினம் இன்றாகும்.

இணுவில் — மஞ்சத்தடி அருணகிரிநாத சிவசுப்பிரமணியர் ஆலயத்தின் கருவறை அமைந்த பகுதியில் சமாதி நிலையில் காணப்படும் பெரிய சந்நியாசியார் ஈழத்துச் சித்தர்களில் ஒருவர். எனினும் இதுவரை அவரை ஈழத்துச் சித்தர் பரம்பரையில் அடக்காமை கவலைக்குரியதாகும்.

பெரிய சந்நியாசியாரின் இயற்பெயர் சுப்பிரமணியம். இவர் 1860 ஆம் ஆண்டு இணுவில்பதியில் வாழ்ந்த கந்தர்—தெய்வானை தம்பதிகளுக்கு மகனாக அவதரித்தவர். விவசாயம் செய்யும் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த இவர் சிறு வயதில் தனது வீட்டு வளவில் சிறுகுடில் அமைத்து அதில் மாரியம்மையை எழுந்தருளச் செய்து வழிபட்டு வந்தார்.

குடும்பநிலை காரணமாக படிப்பை நிறுத்திவிட்டு பெற்றோர்களுக்காகவும் சகோதரர்களுக்காகவும் அவர்களுக்குத் துணையாக ஆநிரை மேய்ப்பதில் இவர் ஈடுபட்டு வந்தார். இவர் தனது ஆநிரைகளை மேயவிடும் இடம் காரைக்கால் என்னும் பகுதியாகும். இன்று பழைமை வாய்ந்த சிவன்கோயிலுடன் விளங்கும் காரைக்கால் அன்று காரைப்பற்றைகள் நிறைந்த இடமாகக் காணப்பட்டது.

ஒருநாள் தனதுஅன்னைக்கு சுகயீனம் என்று அறியாமல் மதிய உணவு கொண்டு வருவார் என நினைத்து காலையில்நீராகாரம்மட்டும் அருந்திவிட்டு ஆநிரைகளுடன் சுப்பிரமணியம் காரைக்காட்டுக்கு சென்று விட்டார். மதிய வேளை வெயில் கொடுமை, பசிக்களை காரணமாக இவர் மயங்கி ஒரு மரநிழலில் துவண்டு சாய்ந்து விட்டார்.

### அம்மன் தந்த சாமிச் சோறு

திடீரென அவரது தாயாரது குரல்கேட்டு திடுக்கிட்டு எழுந்த சுப்பிரமணியம், அன்னை புன்சிரிப்புடன் நீட்டிய பனை ஓலைப்பெட்டியை வாங்கிப் பார்த்தான். அத்துடன் அதனுள்ளே சிறு முத்துக்கள் நிறைந்திருப்பது போன்று காணப்பட்ட சாமிச் சோற்றை அள்ளி உண்டான். விக்கல் தோன்றவே தனது தாயாரைத் திரும்பிப் பார்த்தான். தாயாரோ அன்றைய தினம் தண்ணீர் எடுத்து வரவில்லை வழமைக்கு மாறாக அங்கிருந்த கற்குழியலைச் சுட்டிக் காட்டினார்.

அங்கே சென்று பார்த்த சுப்பிரமணியம், அதிசயத்துடன் தாயாரைப் பார்த்தான். ஆனால் அங்கு தாயாரை அவனால் காண முடியவில்லை. தாயார் மாயமாக மறைந்து விட்டார்.

பின்னர் மாலை ஆகியதும் ஆநிரையுடன் வீடு நோக்கிச் சென்ற சுப்பிரமணியம் ஏன் சொல்லாமல் வந்து விட்டீர்கள் எனத் தாயாரைக் கேட்டான். அதற்குத் தாயார் சுகயீனம் காரணமாக அன்றைய தினம் தான் எங்குமே செல்லவில்லை எனக் கூறிவிட்டார். அப்போதுதான் நடந்தது எல்லாம் அற்புதங்கள் என்பதை அவன் அறிந்து கொண்டு மாரியம்மன் குடியிருந்த குடிலுக்குள் விழுந்து புரண்டு ஆனந்தக் கண்ணீர் விட்டழுதான். மாரியம்மனின் புகழை எண்ணிப் பாடினான். ஆம்; அன்னை அளித்த அருள் உணவு அவனுக்கு அருட்கொடையாகி விட்டது.

### திருவருள் நிறைந்தது

குழந்தையான திருஞானசம்பந்தருக்கு அமுதூட்டிய அன்னை, சுப்பிரமணியனுக்குச் சாமிச் சோறு ஊட்டினாள். சுப்பிரமணியம் அருள் பெற்றான் — மருள் துடைத்தான். அவனிடம் பெரும் மாறுதல்கள் தோன்றின. அவன் கூறும் வார்த்தைகள் அருள்வாக்குகளாயின. அவன் கொடுக்கும் விபூதி பிணி தீர்க்கும் மருந்தாகியது. காலவெள்ளம் அவரை ஒரு மகானாக, ஊரார் மட்டுமன்றி பிற ஊரவரும் மதிக்கும் நிலைக்கு உயர்த்தியது. தீராத நோய் தீர்க்கும் திருவருள் பெற்று விளங்கினார்.

### மஞ்சம் செய்ய வந்தவர்

இணுவில் கந்தசுவாமி ஆலயத்துக்கு திருமஞ்சம் ஒன்றைச் செய்யவேண்டும் என்ற எண்ணம் சுப்பிரமணியத்தின் உள்ளத்தில் எழுந்த வேளையில் நோய் தீர்க்கும் பொருட்டு "செய்யது" என்ற முஸ்லிம் அவரை நாடி வந்தார். அதன் மூலம் தனது பிணியையும் தீர்த்துக்கொண்டார்.

சுப்பிரமணியத்தின் அற்புதச் செயல்களைக் கண்ட "செய்யது" அவரது அன்புக்காளாகிஇந்தியாவில் தேவகோட்டையில் உள்ள முத்துராஜ்கப்பர் என்ற சிற்பாசாரியார் பற்றிச் சுப்பிரமணியத்திடம் எடுத்துக் கூறினார்.

ஒரு மாதத்தின் பின்னர் முத்துராஜ்கப்பரும் அவரது குழுவினரும் சுப்பிரமணியத்திடம் (சந்நியாசியாரிடம்) வந்து சேர்ந்தனர். சுப்பிரமணியத்தாரே நேரில் வந்து தங்களை அழைத்து வந்ததாக அவர்கள் கூறினர். இதனைக் கேட்ட சகலரும் ஆச்சரியமடைந்தனர். உண்மையில் சுப்பிரமணியத்தார் இணுவிலை விட்டு எங்குமே செல்லவில்லை என்பதை அறிந்து முத்துராஜ்கப்பரே வியந்து வணங்கினார்.

**கே. எஸ். ஆனந்தன்**
**(இணுவில்)**

சுப்பிரமணியத்தாரின் மேற்பார்வையில் உருவாகிய கலைப்படைப்பான திருமஞ்சம் நூறு ஆண்டுகளுக்குப் பின்பும் சிற்பக் கருவூலமாக இணுவில் கந்தசாமி ஆலயத்தில் ஆண்டுக்கு இரண்டு தடவைகள் வீதிஉலா வருகின்றது. மேற்கு நாடுகளைச் சேர்ந்தவர்களே இதன் அமைப்பைக் கண்டு வியந்து போற்றியுள்ளனர். இவ்வாறு மஞ்சம் செய்த இடம் மஞ்சத்தடியானது.

காரைக்கால் சிவன் கோயிலைக் கட்டுவித்தவர் சுப்பிரமணியம் என்ற இயற்பெயரைக் கொண்ட சந்நியாசியாரே. அன்னை உணவூட்டிய இடத்தில் அன்னைக்கு ஒரு கோயிலைக் கட்டி அன்னையின் விக்கிரகத்தைச் சுதைக்கல்லில் அமைத்து வைத்தார். நீர்ச்சுனை தீர்த்தக் கேணியானது. காரைக்காடு இருந்தும் பெற்றுப் பல்வேறு மரங்கள் உள்ள சோலையானது. அத்துடன் நீர்ப்பாய்ச்சுவதற்காக ஏழு கிணறுகளும் தோண்டப்பட்டன.

இந்த ஆலயத்தில் ஆறடி உயரமான பஞ்சலிங்கம் மூலஸ்தானத்தில் வைக்கப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

---

## சாயி சிந்தனை

மனக்கட்டுப் பாடின்றி மனிதன் ஒரு கணப்பொழுதும் அமைதி காண முடியாது. அமைதியான, ஆனந்தமான வாழ்க்கை வாழ்ந்திட விரும்புகிறவர் புலனுணர்வுகளைக் கட்டுப்படுத்த வேண்டும்.

இந்தப் "புலனடக்கம்" இல்லாததனால் தான் மனிதன் இன்று அமைதியற்று இருக்கிறான். இன்று மனிதன் கவலைகளுக்கு உட்பட்டு அமைதியை இழக்கக் காரணம் அவனிடம் குடிகொண்டுள்ள கணக்கற்ற ஆசைகளே. மனிதனின் இந்த மனோநிலைக்கு உலகத்தைக் குறை கூறுவது சரியல்ல.

இதற்கு "சம்சாரமும்" அதாவது குடும்ப வாழ்க்கையும் காரணம் என்று கூறுவதும் சரியாகாது. உலகத்துடனும் குடும்பத்துடனும் தனது பற்றுதலினால் தானே கட்டுண்டு விடுகிறான் மனிதன். இப்படிப்பட்ட பற்றுதலிலிருந்து விடுபட வேண்டுமானால், வெளிப் பொருள்களினால் பாதிக்கப்படுவதைக் குறைக்க வேண்டும். அதற்குக் கண், காது, நாக்கு இவை மூன்றையும் கட்டுப்படுத்தும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட வேண்டும்.

(ஆதாரம்:- சனாதன சாரதி)

---

## நாளை

சித்திரை 16
வெள்ளிக்கிழமை
திதி: நவமி
பிற்பகல் 12.57 வரை.
நட்சத்திரம்: அவிட்டம்
முன்இரவு 8.57 வரை.
சுபநேரம்: 5.58 - 7.28
ராகுகாலம்: 10.28 - 11.58
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

---

### உதய வாக்கு

மனிதனை மனிதனாக்குவது உதவிகளும் பல வசதிகளும் அல்ல; இடையூறுகளும் துன்பங்களுமேயாம்.

- டப்ளியூ மத்யூஸ்

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

அண்ணாவில், நாரந்தனையைச் சேர்ந்த கந்தன் ராமகிருஷ்ணன் என்பவருடைய விசேட அ. அட்டை (இல. 091307932) நாவலர் சந்திக்கும் கஸ்தூரியார் வீதிக்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்படி விலாசத்திற்குத் தந்து உதவவும்.
(75760)

அச்சுவேலி தெற்கு, அச்சுவேலியைச் சேர்ந்த ஸ்ரீ தயாராணி என்பவருடைய விசேட அ. அட்டை (இல 090300733) அச்சுவேலிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து லிங்கம் புடைவை அகத்தில் ஒப்படைத்து உதவவும்.
(75754)

தம்பு சிவகுமார் என்பவரது விசேட அடையாள அட்டை, P.R.O. பாஸ்ம் No. 091308266 25-4-2000 யாழ். ஆஸ்பத்திரி வீதிக்கும் கஸ்தூரியார் வீதிக்கும் இடையில் தவறிவிட்டன இதைக் கண்டெடுத்தவர்கள் 226, குலம் பிறிம் ஹவுஸ், யாழ். ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம், என்ற விலாசத்தில் ஒப்படைக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.
(75757)

38/10, மருதடி லேன், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அ. இராசநாயகம் என்பவருடைய தே. அ.அ. (இல. 390691904V), வி.அ. அட்டை என்பன ஆரியகுளச் சந்திக்கும் மருதடி வீதிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.
(75777)

## PRIMA கோழித்தீன்

எல்லாவகையான Prima கோழித்தீன் மூடையாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் உமி மூடையாக உண்டு தன பாலசிங்கம், 19 முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் விடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர்
(75746)

## வீடு தேவையா?

வறுமைக்கோட்டின் கீழ் இருக்கும் ஒரு குடும்பத்துக்கு இலவசமாகக் கோப்பாயில் வீடு குடியிருக்கக் கொடுக்கப்படும். விரும்பியோர் கீழ்க் காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்: டாக்டர் ஜெயரட்ணசிங்கம், மெடிக்கல் கிளினிக், கிறிஸ்தவ கல்லூரி அருகில், கோப்பாய்.
(75756)

## ஆசிரியர்கள் தேவை

வலிகாமம் கிழக்கில் உள்ள பிரபல்யமான கல்வி நிறுவனம் ஒன்றுக்கு விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம் ஆகிய பாடங்களைக்கற்பிப்பதில் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள் தேவை.

விண்ணப்பங்கள் 30 – 04 – 2000 இற்கு முன் பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்.

விள. இல. 1053,
மே/பா உதயன்,
யாழ்ப்பாணம்.
(75789)

## இறைச்சிக்கோழி

புறொயிலர், விறாத்து, கல்பேட்ஸ் தினமும் சுகாதார முறையில் நுட்பமான நிறுவையில் சுறுசுறுப்பான சேவையில் கிடைக்கும். தொடர்பு: சிமான், குருநகர் (மீன் சந்தை முன்பாக) யாழ்ப்பாணம்.
(75645)

புறொயிலர், விறாத்து, கல்பேட்ஸ் தினமும் சுகாதார முறையில் நுட்பமான நிறுவையில் சுறுசுறுப்பான சேவையில் கிடைக்கும். தொடர்பு: அப்பன், யாழ். (மீன் சந்தை முன்பாக)
(75644)

## உடன் விற்பனைக்கு

ஒரு கைப்பாவனையில் நல்ல நிலையிலுள்ள சிங்கர் R-80, குளிர்சாதனப் பெட்டி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ம. மல்லிகா, சுழாவடி தபாற்கந்தோருக்கு அருகில் ஆனைக்கோட்டை.
(75761)

## உடன் தேவை

Computer ற்குரிய Key Boards, Monitors (புதியது அல்லது பாவிக்கப்பட்டது) உடனடியாகத் தேவை. வைத்திருப்பவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல 1051, மே/பா உதயன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி/11969)

## விற்பனைக்கு

வேலணை 2 ஆம் வட்டாரத்தில் சாட்டி வீதியில் கூரை ஓடுகள், பனை மரங்கள், கதவுகள், திராந்திகள் முதலியன விற்பனைக்குண்டு. தொடர்பு: அப்பு விஷகடி வைத்தியர், வேலணை. யாழ்ப்பாணத்தில் சி. சோ. சண்முகரத்தினம் 145/4, பிரப்பங்குளம் லேன், வண்ணார்பண்ணை.
[75740]

பாவித்தநல்லநிலையிலுள்ள பாவனைக்குகந்த கைமரங்கள், சலாகைகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: ஞான சூரியர் இல்லம் ஈவினை, புன்னாலைக்கட்டுவன்.
(75780)

## தேவை

வீட்டில் இருந்து வேலைகளைப் பார்ப்பதற்கு 40 வயதுக்கு உட்பட்ட குடும்பப் பொறுப்பு இல்லாத பெண் தேவை. தங்குமிடவசதி, சாப்பாடு இலவசமாக வழங்கப்படும். தொடர்பு:- குறிஞ்சி 308, பரமேஸ்வராச் சந்தி. (கம்பஸ் சந்தி).
(75745)

## ஆனந்தா சோதிட நிலையம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? விவாகம் நடைபெறுமா? மற்றும் எவையானாலும் கேட்டுப் பாருங்கள். டாக்டர் த.சிவானந்தன், பிரபல சோதிடர் செட்டித் தெருச் சந்தி, நல்லூர்.
(75632)

# அம்மன் தந்த...

(7 ஆம் பக்கத் தொடர்)
பட்டுள்ளது இங்குள்ள விக்கிரகங்கள் கிருஷ்ணதேவராயர் காலத்து சிற்பங்களை ஒத்துள்ளன என்று பல்கலைக்கழக ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

சுப்பிரமணியத்தாரின் அற்புதச் செயல்கள் பற்றிய நூல் ஒன்று விரைவில் வெளிவரவுள்ளது. இவர் 1917 ஆம் ஆண்டு சித்திரைத் திருவோண நட்சத்திரத்தில் சமாதி அடைந்தார். இவரது சமாதியே மஞ்சத்தடி அருணகிரிநாத சிவசுப்பிரமணியர் ஆலயத்தின் கருவறை ஆகும்.

சுப்பிரமணிய சுவாமிகளின் குருபூசைத்தினத்தன்றே மேற்படி ஆலயத்தின் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறுகின்றது.

சந்நியாசியாரின் அருள்நிகழ்ச்சிகள் பலவற்றில் ஒன்று இது:

ஒன்பது கிடாரத்தில் சோறு அவிக்கச் சொல்லும் சந்நியாசியார் பூசைகள் நடந்து கூட்டுப்பிரார்த்தனை செய்த பின்னர் ஒன்பதுகுழிதோண்டி சோற்றைப் புதைத்து விடுவார். இதனை விரும்பாத ஓர் அடியவர் ஒரு கிடாரம் சோற்றை எடுத்து மறைத்து விட்டார். ஒன்பதாவது குழிக்கு சோறு இல்லாததைக் கண்ட சந்நியாசியார் மௌனமாக அந்த இடத்தை விட்டு அகன்று சில யார் தூரம் சென்றதும் வழியில் சமாதியாகி விட்டார்.

இதனை அறிந்த அவரது தொண்டர்கள் அவரைத் தூக்கி வந்து பூசைகள் செய்து ஒன்பதாவது குழிக்குள் அவரை சமாதி இருத்தினர். அந்த இடத்தில் கோயிலையும் கட்டினர். ✶

## எமது இதய அஞ்சலி

எமது சக உத்தியோகத்தர்

**திருமதி விமலா ஒலின்டினா மரிசிலின்**

ஆயுர்வேத மருந்தாளர் / பதில் ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர்

அவர்களின் தந்தையார்

**அன்ரனி கபிரியேல் பெர்னாண்டோ**

அவர்கள் அகால மரணமடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்திய டைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பொறுப்பதிகாரியும்
சக உத்தியோகத்தர்களும்.

வலி. தெற்குப் பிரதேச சபை,
உப அலுவலகம், உடுவில். (75792)

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
17 — 09 — 1936

ஆண்டவன் அடியில்
11 — 05 — 1996

திருமதி

**கமலாதேவி தியாகராஜா**

( Rasam Transport உரிமையாளரின் மனைவி )

அன்புக்கும் பாசத்துக்கும் உறைவிடமாய் விளங்கிய எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
**கணவன், பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.**

23, 2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (75776)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
1945 — 03 — 29

மறைவு
2000 — 03 — 28

அமரர்

**முனியாண்டி மருதைவீரன் (வேலு)**

"நேற்று இருப்போர் இன்று இல்லை
இன்று இருப்போர் நாளை இல்லை"

உங்கள் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி
**பார்வதி - மருதைவீரன்.**

'பவளவில்லா',
இல. 9, கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி. (75785)

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் - வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்



அன்னை மடியில்
04 — 11 — 1941

ஆண்டவன் அடியில்
28 — 03 — 2000

**அமரர் சந்திரசேகரம் சிதம்பரநாதன்**

28 - 03 - 2000 (செவ்வாய்க்கிழமை) இறைவனடி எய்திய எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரிகைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், இறுதிக்கிரியை ஏற்பாடுகளில் உதவிகள் வழங்கிய நண்பர்களுக்கும், சிமெந்துக் கூட்டுத்தாபன நண்பர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் எமக்கு ஆறுதலும் உதவிகளும் நல்கியவர்களுக்கும் எமது உளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (27 – 04 – 2000) எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நீங்கா நினைவுகளுடன்
**திருமதி சி. தனலட்சுமி**
(தையல் அன்ரி)

சி. சதீஸ்குமரன்
சி. துஷ்யந்தன்
சி. சிந்துஜன்
] பிள்ளைகள்

உடையார் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (75793)

# தொல்லைகளைத் தாங்கமுடியாது பளையில் இருந்து புறப்பட்டோம்

## அங்கிருந்து கடைசியாக இடம்பெயர்ந்து வந்தவர் கூறுகிறார்

யாழ்ப்பாணம்,ஏப்.27

"பளையிலிருந்து வெளியேறுவதில்லை என்று அங்கு தங்கியிருந்த நானும் எனது குடும்பத்தினரும் ஆனையிறவு வீழ்ச்சியை அடுத்து அங்கு இடம்பெறும் தொல்லைகளைத் தாங்கமுடியாது ஓடி வந்தோம்."

- இவ்வாறு பளை நகரிலிருந்து நேற்று முன்தினம் தென்மராட்சிக்கு வந்து சேர்ந்த வியாபாரி ஒருவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:-

55 வருடங்களாக பளை நகரில் வியாபாரம் செய்து வரும் நான் எந்தப் பிரச்சினை வந்தபோதும் அங்கிருந்து இடம்பெயரவில்லை.

பளைப் பகுதியில் மார்ச் 26 ஆம் திகதி தொடங்கிய பிரச்சினையைத் தொடர்ந்து அங்கிருந்தவர்கள் எல்லோரும் முற்றாக இடம்பெயர்ந்தபோதும் நாங்கள் எமதுகடையில் தங்கியிருந்தோம்.

என்னுடன் எனது மனைவி, மகன் மற்றும் உதவி கேட்டு வந்தவர்கள் உட்படப் பத்துப்பேர் வரையில் தங்கியிருந்தனர். கடையில் பெருமளவு பொருள்களை வைத்திருந்தமையால் எமக்குச் சாப்பாட்டுக்குப் பிரச்சினை இருக்கவில்லை.

ஆனையிறவு முகாம் வீழ்ந்த தன் பின்னர் எமது பகுதிக்கு வந்தவர்கள் அடிக்கடி எங்கள் கடைக்கு வந்து தொல்லைகள் தந்து கொண்டிருந்தனர்.

கத்தியைக் காட்டியும் மிரட்டப்பட்டோம்.

தொல்லை தாங்க முடியாமல் காலை 9மணிக்கு அங்கிருந்து கால் நடையாகப் புறப்பட்டு கடற்கரை வழியாக வந்து பகல் 2 மணிக்கு கிளாலியை வந்தடைந்தோம்.

பளை நகரத்திலுள்ள ப.நோ.கூ.சங்கக்கடைகள், எரிபொருள் நிலையம் போன்றவை உடைக்கப்பட்டுப் பொருள்கள் சூறையாடப்படுவதை என் கண்ணால்கண்டேன்.

எனது கடையில் மட்டும் 55 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களையும் மற்றும் அங்கிருந்து இடம்பெயர்ந்தவர்கள் வைத்து விட்டுவந்த இலட்சக் கணக்கான ரூபா பெறுமதியான பொருள்களையும் கைவிட்டு வந்துள்ளேன்.

பளை நகரிலுள்ள இராணுவக் கொமாண்டர் எம்மை பளையில் தங்குவதற்கு அனுமதித்த போதும், ஆனையிறவிலிருந்து வந்த படையினரின் தொல்லையினாலேயே நாம் வெளியேறினோம்.

இப்போது பளைப் பிரதேசத்தில் பொதுமக்கள் எவரும் இல்லை.

- இப்படி அவர் மேலும் கூறினார்.

(உ-5)


# யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழு

**எமது குழுவினால் யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவ மாணவியருக்கிடையே வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், யாழ்ப்பாணம் ஆகிய நிலையங்களில் நடத்தப்பட்ட 06 பிரிவுகளைக்கொண்ட பண்ணிசைப் போட்டி முடிவுகள் - 2000**

**(அ) கீழ்ப்பிரிவு (ஆண்கள்)**

1 ஆம் இடம் - குலேந்திரன் ஜெகதீசன், *யா/யூனியன் கல்லூரி.*
2 ஆம் இடம் - (இருவர்) 1. பாலசூரியன் நிஷாந்தன், *யா/இந்துக்கல்லூரி.*
2. சி.ஜனகன் முத்துக்குமார், *யா/பரியோவான் கல்லூரி.*
4 ஆம் இடம் - ஏகாம்பரமூர்த்தி டினேஸ், *யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி.*
5 ஆம் இடம் - சி.உமாறாஜி, *யா/புனித மரியாள் வித்தியாலயம்.*

தகைமை பெற்றோர் - 06 பேர்

**(ஆ) கீழ்ப்பிரிவு (பெண்கள்)**

1 ஆம் இடம் - வைஷ்ணவி ஜெயச்சந்திரபைரவமூர்த்தி, *யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.*
2 ஆம் இடம் - வாசுகி கிருஷ்ணன், *யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி.*
3 ஆம் இடம் - விஜயருக்ஷாயினி *சந்திரசேகரம், யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.*
4 ஆம் இடம் - மிதிலா *ஜெயச்சந்திரன், யா/இந்து மகளிர் கல்லூரி.*
5 ஆம் இடம் - கௌந்திகா பாலசூரியன், *யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.*

தகைமை பெற்றோர் - 04 பேர்

**(இ) மத்திய பிரிவு (ஆண்கள்)**

1 ஆம் இடம் - அழகேசன் அமிர்தலோஜனன், *யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.*
2 ஆம் இடம் - கதிரேசபிள்ளை தர்ஸனன், *யா/இந்துக் கல்லூரி.*
3 ஆம் இடம் - குமாரவடிவேல் நிருத்தன், *யா/இந்துக்கல்லூரி.*
4 ஆம் இடம் - ஜெயராஜா ரஜீவன், *யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி.*
5 ஆம் இடம் - தேவதாசன் பிறேமதாசன், *யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி.*

தகைமை பெற்றோர் - 04 பேர்

**(ஈ) மத்திய பிரிவு (பெண்கள்)**

1 ஆம் இடம் - ஸ்வஸ்திகா ரஞ்சன், *யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.*
2 ஆம் இடம் - தாரணி ஸ்ரீபாலச்சந்திரன், *யா/இந்து மகளிர் கல்லூரி.*
3 ஆம் இடம் - தர்சிகா நாகேந்திரன், *யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.*
4 ஆம் இடம் - (இருவர்) 1. நிசா தர்மலிங்கம், *யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி.*
2. பபித்தா ஸ்ரீசந்தனராஜா, *யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி.*

தகைமை பெற்றோர் - 05 பேர்

**(உ) மேற் பிரிவு (ஆண்கள்)**

1 ஆம் இடம் - ரஞ்சன் கஜானனன், *யா/இந்துக் கல்லூரி.*
2 ஆம் இடம் - சத்தியமூர்த்தி லக்மன், *யா/யூனியன் கல்லூரி.*
3 ஆம் இடம் - (இருவர்) 1. கோயிலாம்பிள்ளை சிவராசா, *யா/கலட்டி றோ.க. ஆண்கள் பாடசாலை.*
2. குமாரவடிவேல் குருபரன், *யா/இந்துக் கல்லூரி.*
5 ஆம் இடம் - இராசலிங்கம் பிரபு, *யா/யூனியன் கல்லூரி.*

தகைமை பெற்றோர் - 02 பேர்

**(ஊ) மேற்பிரிவு (பெண்கள்)**

1 ஆம் இடம் - தமிழினி தங்கவடிவேல், *யா/இராமநாதன் கல்லூரி.*
2 ஆம் இடம் - நளாயினி விக்னேஸ்வரன், *யா/யூனியன் கல்லூரி.*
3 ஆம் இடம் - (இருவர்) 1. மனோஜினி திருலோகநாதன், *யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.*
2. தாட்சாயினி கார்த்திகேசு, *யா/விக்கினேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி.*
5 ஆம் இடம் - இந்திராபிரியதர்சினி சீவரத்தினம், *யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.*

தகைமை பெற்றோர்- 02 பேர்

**இவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் எதிர்வரும் 29.04.2000 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு (புதிய நேரம்) நாவலர் கலாசார மண்டபத்தில் மாநகர ஆணையாளர் திரு.வே.பொ.பாலசிங்கம் அவர்களின் தலைமையில் இடம்பெறும்.**

**குறிப்பு: இறுதிப்போட்டியில் பங்குபற்றிய அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.**

சுகாதாரப் பிரிவு,
மாநகர சபை, யாழ்ப்பாணம்.
25.04.2000

**சைவசமய விவகாரக் குழு,**
**யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.**

(C/11977)


# எஞ்சியுள்ள தென்பகுதி டாக்டர்களிலும் இருவர் திரும்பிச் செல்வதற்கு முயற்சி

## யாழ்.ஆஸ்பத்திரியில் டாக்டர்கள் பற்றாக்குறை

யாழ்ப்பாணம்,ஏப்.27

யாழ். போதனா வைத்தியசாலையில் தற்போது தென்பகுதியைச் சேர்ந்த டாக்டர்கள் மூவரே கடமையில் உள்ளனர். இவர்களிலும் இருவர் மீண்டும் தென்பகுதிக்குத் திரும்பிச்செல்லக் கோரிக்கை விடுத்துள்ளனர் என்று தெரியவருகிறது.

வடபகுதியில், தென்பகுதியைச் சேர்ந்த சுமார் 40 டாக்டர்கள் சில மாதங்களுக்கு முன்பு பணிபுரிந்து வந்தனர்.

யாழ். குடாநாட்டில் மீண்டும் யுத்த நெருக்கடி ஏற்பட்டதையடுத்து இந்த டாக்டர்கள் படிப்படியாகத் தென்பகுதிக்குத் திரும்பிச் சென்றுவிட்டனர். தற்பொழுது மூவர் மட்டுமே இங்கு கடமையாற்றுகின்றனர்.

இவர்களிலும் இருவர் தற்போது திரும்பிச் செல்லக் கோரிக்கை விடுத்துள்ளனர் என்று கூறப்படுகிறது.

இதனால் வடபகுதியில் நிலவும் டாக்டர் பற்றாக்குறை மேலும் நீடிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

# இடம் பெயர்ந்தவர்களைக் குடியமர்த்தும் கொட்டகைகளின் மாதிரி வடிவம்

## செயலக வளவில் பார்வைக்கு

யாழ்ப்பாணம்,ஏப்.27

பளை மற்றும் வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து தற்பொழுது நலன்புரி நிலையங்களில் தங்கியிருப்பவர்களைக் குடியமர்த்துவதற்கென அமைக்கப்படவுள்ள தகரக் கொட்டகைகளின் மாதிரி வடிவம் யாழ். செயலக வளவில் மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

15அடி நீளமும் 10அடி அகலமும் கொண்ட இந்தக் கொட்டகை இரும்புக் குழாய்களினால் அமைக்கப்பட்டு தகரச் சீற்றினால் கூரைகள் வேயப்பட்டுள்ளன.

குடும்ப எண்ணிக்கைக்கு ஏற்ற வகையில் இந்தக் கொட்டகைகள் அமைத்துக் கொடுக்கப்படும் என்று யாழ்.அரச அதிபர் க.சண்முகநாதன் தெரிவித்தார்.

அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம், ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம் போன்றவற்றின் உதவியுடன் முதற்கட்டமாக ஆயிரத்து 500 கொட்டகைகள் அமைக்கப்பட்டு இடம்பெயர்ந்தவர்கள் குடியமர்த்தப்படவுள்ளனர்.

தேவை ஏற்படும் பொழுது வேறு இடங்களுக்குக் கொண்டு சென்று அமைக்கும் வகையில் இந்தத் தகரக் கொட்டகைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

வரணி, கற்கோவளம் பகுதிகளில் குடியமரும் மக்களுக்கு இந்தக் கொட்டகைகள் வழங்கப்படவுள்ளன. (இ-5)

# தொண்டமானாறு, ஊரிக்காடு பகுதிகளில் நாய்களுக்கு ஊசி

யாழ்ப்பாணம்,ஏப்.27

வளர்ப்புநாய்களுக்கான தடுப்பூசி வல்வெட்டித்துறை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட தொண்டமானாறு,ஊரிக்காடு பகுதிகளில் நாளை வெள்ளிக்கிழமை போடப்படவுள்ளது.

தொண்டமானாறு பகுதியில், தொண்டமானாறு பாலர் பாடசாலையில் காலை 9மணி முதல் 11 மணி வரையும் தடுப்பூசி போடப்படும் எனவும்-

அன்றையதினம் பிற்பகல் 12 மணிமுதல் 2மணி வரை ஊரிக்காடு பகுதியில், ஊரிக்காடு சனசமூகநிலையத்தில் தடுப்பூசி போடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த இரு பகுதி மக்களும் தவறாது தமது வளர்ப்புநாய்களுக்கான ஊசி மருந்தைப் போட்டுக் கொள்ளுமாறு வல்வெட்டித்துறைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ். சாந்தமூர்த்தி கேட்டுள்ளார்.

## பகிடிவதை தொடர்பாகக் கைதான

# பேராதனைப் பல்கலைக்கழக மாணவருக்கு விளக்கமறியல்

பேராதனைப் பல்கலைக்கழக கலைப்பீடத்தில் அண்மையில் இடம்பெற்ற பகிடிவதை தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இரு மாணவர்களையும்தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு கண்டி நீதிமன்ற நீதிவான் லியோன் செனிவிரட்ண உத்தரவிட்டுள்ளார்.

பகிடிவதை தொடர்பாக பேராதனைப் பொலீஸ் நிலையத்தில் முறையீடு செய்யப்பட்டதையடுத்து சம்பந்தப்பட்ட சந்தேகநபர்கள் பதின்மூன்று பேரில் இரண்டு பேரை பொலீஸ் கைது செய்தது.

இந்த வழக்கு நேற்று முன்தினம் கண்டி நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் எடுக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட ஏனைய பதினொரு பேரும் தலைமறைவாகியுள்ளதாகப் பொலீஸார் தெரிவித்ததை அடுத்து நீதிவான் வழக்கை எதிர்வரும் ஜூலை 4ஆம் திகதிக்குப் பிற்போட்டதுடன் விசாரணைகளையும் அன்றைய தினத்துக்கு ஒத்திவைத்தார். (இ-8)

# தந்தை செல்வா சிரார்த்த தினம் நேற்று யாழ்.நகரில் அனுஷ்டிப்பு

தந்தை எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் 23 ஆவது சிரார்த்த தினம் நேற்று யாழ்.நகரிலுள்ள தந்தை செல்வா நினைவுத் தூபிப் பகுதியில் அனுஷ்டிக்கப்பட்டது.

தந்தை செல்வாவின் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை சாத்தியும், மலரஞ்சலி செலுத்தியும் சிரார்த்ததினம் அனுஷ்டிக்கப்பட்டது.தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில், நினைவுத் தூபி முன்றலில் அ.பொ.செல்லையா தலைமையில் அஞ்சலியுரைகள் இடம்பெற்றன.

தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கத் தலைவர் சி.சிவமகாராசா மற்றும் எஸ்.வைத்திலிங்கம், பொ.சுப்பையா, எஸ்.ஹமீத், யாழ். மாநகர சபை உறுப்பினர் செ.விஜயரட்ணம் ஆகியோரும் அஞ்சலி உரை நிகழ்த்தினர். (இ-15-5)

## மெய்வன்மைப் போட்டி

யாழ்.மாவட்டப் பிரதேச செயலகப் பிரிவுகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் 29ஆம், 30ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் காலை 8-30மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ப.திலகநாயகம் தலைமையில் நடைபெறும் இந்தப் போட்டியில் பிரதம விருந்தினராக யாழ் அரசாங்க அதிபர் க.சண்முகநாதனும், முதன்மை விருந்தினராக மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி எஸ்.என்.தணிகாசலம்பிள்ளையும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

## உதைபந்தாட்டம்

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று பிற்பகல் 3-30 மணிக்கு ஆவரங்கால் வீனஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தஆட்டத்தில் எவரெஸ்ட் விளையாட்டுக்கழக அணியும் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியும் மோதவுள்ளன.

# பலாலி இராணுவ ஆஸ்பத்திரிக்கு மேலும் மருத்துவ உபகரணங்கள்

## அவசரமாக அனுப்பிவைப்பு

கொழும்பு,ஏப்.27

பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு கொழும்பிலிருந்து ஒரு தொகுதி மருத்துவ உபகரணங்களும் மருந்துப் பொருள்களும் உடனடியாக அனுப்பிவைக்கப்படவுள்ளன.

நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மகாநாடு ஒன்றில் சுகாதார அமைச்சர் இத்தகவலை வெளியிட்டார்.

இரத்தத்தைச் சேமித்து வைக்கத் தேவையான - கூடுதல் குளிரைத் தாங்கக்கூடிய - குளிரூட்டும் கருவிகள், அம்புலன்ஸ்கள் செயற்கைச் சுவாசக் கருவிகள், 30 கட்டில்கள் ஆகியவற்றைப் பலாலிக்கு உடனடியாக அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

தற்போதைய நிலைமைகளைச் சமாளிப்பதற்காக இராணுவத்துக்குத் தேவையான மருந்துகளை உடன் வழங்குமாறு சுகாதார அமைச்சர் அரச மருந்தாளர் கூட்டுத்தாபனத்துக்கு உத்தரவிட்டுள்ளார்.

# கோணாந்தோட்டத்தில் கோஷ்டி மோதல் சம்பவம்

யாழ்ப்பாணம்,ஏப்.27

யாழ். நகரத்தை அண்டிய கோணாந்தோட்டம் பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவும், நேற்று முற்பகலிலும் இடம்பெற்ற இருவேறு தாக்குதல் சம்பவங்களை அடுத்து நேற்று முழுநாளும் அங்கு பதற்ற நிலை காணப்பட்டது.

நள்ளிரவுவேளை மது போதையில் வந்த இளைஞர் குழு ஒன்று குளிர்சாதனப்பெட்டி திருத்துநர் ஒருவரின் வீட்டினுள் புகுந்து வான் மற்றும் மோட்டார் சைக்கிள் ஆகியவற்றைத் தாக்கியதுடன், ஆள்கள்மீதும் தாக்குதல் நடத்தியதை அடுத்தே இந்தப் பதற்ற நிலை தோன்றியுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை மேற்படி தாக்குதல் சம்பவத்தின் எதிரொலியாக அப்பகுதியில் உள்ள வீடியோக் கடை ஒன்று நேற்று முற்பகல் 10.30 மணியளவில் பலத்த சேதமாக்கப்பட்டது.

இதே சமயம் -

நேற்று முன்தினம் நள்ளிரவு நடத்தப்பட்ட தாக்குதலின்போது தமிழ்க்கட்சி ஒன்றின் உறுப்பினர்கள் அந்தப் பகுதியில் ஆயுதங்களுடன் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் குறித்து யாழ். பொலீஸில் முறைப்பாடு செய்யச் சென்றவர்கள் முறைப்பாடு ஏற்றுக் கொள்ளப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டனர் எனவும் தெரியவந்தது.

## இரு பெண்கள் வவுனியாவில்கைது

வவுனியா,ஏப்.27

போலியான பொலீஸ் வதிவிட அனுமதிப்பத்திரங்கள் வைத்திருந்த இரு பெண்களை வவுனியாப் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

போலி அனுமதிப் பத்திரங்களுடன் கொழும்பு செல்ல முயன்ற சமயம் இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டதாகவும் -

மேலதிக விசாரணைக்காக இவர்கள் வவுனியா பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

(உ-6-9)

## ஆனையிறவில் விமானத் தாக்குதல்கள்

தொடர்ந்து இரண்டாவது நாளாக நேற்றும் ஆனையிறவுப் பகுதியிலுள்ள விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது விமானத் தாக்குதல் நடத்தப்பட்டதாக விமானப் படை அறிவித்துள்ளது.

இராணுவம் அளித்த தகவல்களின் அடிப்படையில் புலிகளின் நிலைகள்மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அது தெரிவித்தது.

(உ-6)

## மீன்பிடித் தடையை நீக்கக் கோரி

# வடமராட்சி மீனவர் நேற்று ஊர்வலம்

நெல்லியடி,ஏப்.27

வடமராட்சி கடற்பரப்பில், கடற்றொழிலாளர்கள் கடலுக்குச் சென்று தொழில் செய்வதற்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குமாறு கோரி நேற்றுக் காலை பருத்தித்துறையில் ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது.

பருத்தித்துறையில் முனை தொம்மையார் ஆலயத்திலிருந்து ஆரம்பமான இந்த ஊர்வலத்தில் நூற்றுக்கு மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் கலந்து கொண்டனர். ஊர்வலம் மூன்றாம் குறுக்குத்தெரு வீதி ஊடாக நேற்றுக் காலை 9 மணிக்கு பருத்தித்துறை நகரைச் சென்றடைந்தது.

ஊர்வலத்தில் கலந்து கொண்டோர். மீன்பிடித் தடையை நீக்குமாறு விடுத்த கோரிக்கைக்குத் தமது பதிலை இன்று தெரிவிப்பதாக படையினர் கூறியதையடுத்து ஊர்வலத்தில் சென்றோர் கலைந்து சென்றனர்.

வடமராட்சியில் மணல்காடு தொடக்கம் தொண்டைமானாறு வரையிலான கடற்பரப்பில் கடந்த சில தினங்களாக மீன் பிடிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது தெரிந்ததே.

(உ-109)

## ஆனையிறவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டின் பல்வேறு வைத்தியசாலையில் 473 பேரும் சிகிச்சை பெற்று வருவதாகவும் அவர் கூறினார்.

சிறுகாயங்களுக்கு உள்ளான மேலும் பல படையினர் சிகிச்சை பெற்றுக் கொண்டு வைத்தியசாலைகளில் இருந்து வெளியேறி விட்டனர் என்றும் பாலித பெர்னாண்டோ சொன்னார்.

(உ-6-9)

## உடனடியாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை மட்டுமே புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு எடுத்துச் செல்வதைத் தாம் தடுத்துவருவதாக இராணுவத் தரப்புக் கூறியுள்ளது.

அண்மையில் ஆனையிறவு இராணுவத் தளத்தில் இராணுவத்துக்கு ஏற்பட்ட பின்னடைவே வன்னிக்கு மருந்துப் பொருள்கள் அனுப்பப்படாததற்குக் காரணம் என்று பி.பி.ஸி. தெரிவித்தது.

(உ-6-9)

## ஆனையிறவில் உயிரிழந்த

# 4 படை உயரதிகாரிகளின் இறுதிக்கிரியைகள் நேற்று

யாழ்ப்பாணம்,ஏப்.27

ஆனையிறவு மோதலில் உயிரிழந்த 4 படை உயரதிகாரிகளினதும் இறுதிக் கிரியைகள் நேற்றுக் கொழும்பில் சகல இராணுவ மரியாதைகளுடனும் இடம்பெற்றன.

மேஜர் ஜெனரல் வி.சி. பெர்னாண்டோ, பிரிகேடியர் டபிள்யூ. ஏ.பி.டி. ஜெயதிலக ஆகியோரின் இறுதிக் கிரியைகள் பொரளை கனத்தை மயானத்தில் நடைபெற்றன. பிரிகேடியர் அக்னி மினியின் இறுதிக் கிரியைகள் பண்டாரவளையிலும், கேணல் எச்.டபிள்யூ. கேவாச் ஆராய்ச்சியின் இறுதிக் கிரியை மகரகமயிலும் நடைபெற்றன.

இறுதிக் கிரியைகளில் இராணுவ உயர்அதிகாரிகள், அமைச்சர்கள் ஆகியோர் உட்படப் பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.


## மாபெரும் மில்லேனிய கிரிக்கெட் சுற்றுப்போட்டி

நல்லூர் வடக்கு விநாயகர், யாழ் விளையாட்டுக் கழகங்கள் இணைந்து நடத்தும் 07 பேர் கொண்ட 12 பந்துப் பரிமாற்றங்கள் உடைய மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் கழகங்கள் பின்வரும் இடங்களில் விண்ணப்பங்களை பெற்று பூர்த்தி செய்து ஒப்படைக்கவும்

விண்ணப்ப முடிவு திகதி : 08.05.2000

*விண்ணப்பப் படிவம் கிடைக்குமிடம் :*

1) நல்லி சில்க்ஸ், யாழ்ப்பாணம்
2.) விஜய் றெக்கோடிங் ஸ்பொட், பருத்தித்துறை வீதி, நல்லூர்
3) விநாயகர் களஞ்சியம், பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு.

விநாயகர் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

*விநாயகர், யாழ் விளையாட்டுக் கழகத்தினர்.*

*விளம்பர அன்பளிப்பு:-*

நல்லி சில்க்ஸ்
யாழ்ப்பாணம். (C/11964)



## NCCA பரீட்சை

மேற்படி அரச அங்கீகாரம் பெற்ற கணனிப் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்களை எமது தலைமை அலுவலகத்திலும் நெல்லியடிக் கிளை அலுவலகத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

★ *கணனித் துறையில் ஏதாவது ஒரு பயிற்சிநெறியினை முடித்துக் கொண்ட மாணவர்களும் புதிய மாணவர்களும் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கமுடியும்.*

★ *2000ஆம் ஆண்டு A/L பரீட்சை எடுக்கும் மாணவர்களின் நலன்கருதி மேற்படி பரீட்சைக்குத் தோற்றுவதற்கான விசேட பிரிவொன்று செப்ரெம்பர் மாத முதலாம் வாரத்தில் ஆரம்பிக்கப்படும்.*

★ *விண்ணப்ப முடிவு திகதி:*

*28-04-2000*

இயக்குநர்,
IIS.

*100, மணிக்கூட்டு வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(C/11966)


# 1000 அடையாளஅட்டைகள் கொழும்பிலிருந்து வந்தன

யாழ்ப்பாணம்,ஏப்.27

கொழும்பிலுள்ள ஆள்பதிவுத் திணைக்களத்திலிருந்து ஆயிரம் தேசிய அடையாள அட்டைகள் யாழ்.செயலகத்திலுள்ள அடையாள அட்டைகள் பிரிவுக்கு நேற்றுமுன்தினம் வந்து சேர்ந்தன.

தொலைந்துபோன அடையாள அட்டைகளைப் பெறுவதற்கு விண்ணப்பித்தவர்களின் அடையாள அட்டைகளே கூடுதலாக வந்து சேர்ந்துள்ளதாக அடையாள அட்டைப் பிரிவு அதிகாரி ஒருவர் கூறினார்.

இந்த அடையாள அட்டைகள் பிரதேச செயலகங்கள் மூலம் உரியவரிடம் ஒப்படைக்கப்படும் என்றும் அந்த அதிகாரி கூறினார்.

(இ-5)

# எக்ஸ்-றே பிரிவு ஸ்தம்பிக்கும் நிலை

யாழ்ப்பாணம்,ஏப்.27

மந்திகை ஆதார வைத்தியசாலையின் எக்ஸ் - றே பிரிவில் ஜ.வி.பி. எக்ஸ்றேக்கு அத்தியாவசியமான யூறோ வீடியோ மருந்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் ஜ.வி.பி. எக்ஸ் - றே எடுக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த ஜனவரியில் இருந்தே இந்த மருந்துக்கு தட்டுப்பாடு நிலவுவதாகவும், இதனால் இந்த வகை எக்ஸ் - றே எடுக்க முடியாத நிலையில் நோயாளர்கள் சிகிச்சைக்காக யாழ்.ஆஸ்பத்திரியை நாட வேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஏனைய எக்ஸ்-றேக்கள் எடுப்பதற்கும் இன்னும் இரண்டு மாதங்களுக்குப் போதுமான பிலிம் மட்டுமே இருப்பதாகவும் அதன் பின்னர் எக்ஸ் - றே பிரிவு ஸ்தம்பிதமடையலாம் எனவும் தெரியவருகிறது.

(இ-15)

# மீட்கமுடியாத நிலையில் ப.நோ.கூ.ச. பொருள்கள்

யாழ்ப்பாணம்,ஏப்.27

பளை ப.நோ.கூ.சங்கத்தில் 75 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் மற்றும் ஆவணங்களை அங்கு செல்ல முடியாமையினால் மீட்க முடியாது போய்விட்டதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி சங்கத்தின் தலைமைச் செயலகம், களஞ்சியம் மற்றும் 42 கிளைகள் ஆகியவற்றில் உணவுப் பொருள்களும், கட்டடப் பொருள்களும் இருந்ததுடன் சங்கத்தின் எரிபொருள் நிலையத்திலும் மண்ணெண்ணெய், பெற்றோல் போன்றவை இருந்தன.

தற்பொழுது பளையிலிருந்து பொதுமக்கள் எல்லோரும் இடம்பெயர்ந்த நிலையில் இப்பொருள்களை மீட்க முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதே சமயம் பளையிலிருந்து இடம்பெயர்ந்துள்ள மக்களின நன்மை கருதி பளை ப.நோ.கூ. சங்க தலைமைச் செயலகம் கொடிகாமத்திலும் சங்கத்தின் இரு கிளைகள் மிருசுவிலிலும் இயங்கி வருகின்றன.

இந்தக் கிளைகள் மூலம் தற்பொழுது நிவாரணம் வழங்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

மேலும் பளைமக்கள் தங்கியுள்ள இடங்களில் புதிய கிளைகளைத் திறப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-5-10)

## தொடர்புகொள்ளக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.27

கீழ்க்காணும் பெயர்களையுடைய நால்வரையும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. நால்வரினதும் பெயர் விவரங்கள் வருமாறு:-

* ச.சண்முகம்(ஐயனார் கோயில் வீதி,நாவற்குழி)

* க.கணேசமூர்த்தி (சோபியா கல்வி நிலையம், டச் வீதி, சாவகச்சேரி)

* குணரத்தினம் செல்லம்மா (பருத்தித்துறை)

* க.சிறீகாந்தன் (மே/பா.கந்தையா சின்னத்துரை, தம்பகாமம்)

## சிப்பாய் பலி!

மட்டக்களப்பு,ஏப்.27

மட்டக்களப்பு - வாழைச்சேனை பிரதான வீதியில் நேற்றுக் காலை 9.45மணியளவில் இடம்பெற்ற கிளைமோர்க் குண்டுத் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் படுகாயமடைந்தார்.

(உ-7)


## BRIGHTMAN

கல்வி நிலையம்

(நீராவியடிப் பிள்ளையார் கோயில் முன்பாக)
பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.

A/L 2001, 2002

பொது ஆங்கிலம்

ஆசிரியர்:- MR. M.A.HARI

ஆரம்பம்:- 28-04-2000

வெள்ளி 4.00 p.m (75779)


## மரண அறிவித்தல்

### வெற்றிவேலு குமரையா

தணங்களப்பைப் பிறப்பிடமாகவும், நுணாவில் கிழக்கு சாவகச்சேரியை தற்காலிக முகவரியாகவும் கொண்ட வெற்றிவேலு குமரையா நேற்று (26.04.2000) புதன்கிழமை காலமானார்.

அன்னார் அன்னம்மாவின் அன்புக் கணவரும் தவமணி, தங்கரத்தினம், காலஞ்சென்ற வேல்முருகு, இராசபூபதி (இத்தாலி), சிவானந்தராசா (இத்தாலி), செல்வநாயகம் (கிளி - சுவிஸ்), ஆகியோரின் அன்புத் தந்தையும் இரத்தினம், தங்கம்மா ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற தம்பிமுத்து, வல்லிபுரநாதன், அமிர்தலிங்கம், சுஜாதினி, ஜெயராணி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், வசந்தி, வசந்தரூபன், செவ்வந்தி, சுகிர்தா, மயூரன், இந்துஷா, நிருபன், அஜித்தன், சஜிதன், சர்மிலா, அபிதா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27-04-2000) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக சாவகச்சேரி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

*கல்வயல் வீதி,*
*நுணாவில் கிழக்கு,*
*சாவகச்சேரி.*

(C/11978)

தகவல்:
வல்லிபுரநாதன்
(மருமகன்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27-04-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.